செந்தமிழ்

தொகுதி - 31 எண் - 2

டிசம்பர் - 1933
ஜனவரி - 1934

JL
031m211,N03
N33·31·2
166174.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௧] ஸ்ரீமுக ஹூ மார்கழி [பகுதி-௨.
Vol. XXXI. *December 1933–January 1934.* No. 2.

உள்ளுறை.

உலோச்சனார்:— ஸ்ரீமத். வை. சா. வேங்கடராமையர் [illegible]

தமிழ்ச்சங்கம் செய்ய வேண்டியவை:— ,, இலக்கணவிலக்கிய ஆசிரியர் பாம்பன்— திரு. சோமசுந்தரதேசிகர். [illegible]

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 31-ஆம் ஆண்டுக்கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம், வரவேற்பு, வாழ்த்துரை முதலியன:— [illegible]

மதிப்புரை:— [illegible]

மதுரைத்தமிழ்ச்சங்கத் தீர்மானங்கள்:— [illegible]

மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு:—

சங்கரநயினார்கோயில் அந்தாதி (குறிப்புரையுடன்):- ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய— தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையர். 17-[illegible]

பெருந்தொகை (அடிக்குறிப்பு):- ,, மு. இராகவையங்கார். [illegible]

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ [illegible]] [தனிப்பிரதி அணா—[illegible].
வெளிநாடுகளுக்கு ரூ ௪—8—0.
1933.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avergal, and published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

3-JAN 1934 MADRAS

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மனேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

3-JAN 1934
MADRAS

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧] ஸ்ரீமுக௵ மார்கழி௴ [பகுதி-௨.
Vol. XXXI. December 1933-January 1934. No. 2.

*உலோச்சனார்.

சங்க மருவு தொகைநூ றமுட்டிகழும்
துங்க வுலோச்சனார் சொற்றபல—தங்கரிகர்
பாக்க டுணையாப் பரிந்துரைக்கப் பற்றினேன்
ஆக்கமளித் தாள்க வருள்.

க. முன்னுரை.

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" ஆகிய செந்தமிழ்நாட்டிலே படைப்புக்காலந்தொட்டு முத்தமிழிலும் பல சிறப்பட்ட பற்பல நூல்கள் தோன்றிவருகின்றன. அம்முறையில் அவையனைத்தையும் ஆக்கியருளிய தண்டமிழ்ச்சான்றோர்களான பெரும்புலவர்தலைவர்களும் பற்பலராகத் திகழ்கின்றார்கள். தண்டமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஒவ்வொரு தமிழ்மகனும் தமிழ்மகளும் அந்தப் பல தண்டமிழ்ச்சான்றோர்களின் வரலாறுகளையும் ஓரளவேனும் அறிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாத கடமைகளுள் தலைசிறந்ததாம்.

இவ்வுண்மை சில ஆண்டுகளாக நம்மவரால் உணரப்பட்டுவருவதுடன் காரியத்திலும் பயனளித்துவருவது மகிழ்தற்குரியது. "எண்டிசை போற்றுந் தண்டமிழ்த் தலைமை—தாங்கிச் சிறந்தீண் டோங்குயர் நான்காம்—சங்கந்தன்னைத் தந்தருள் துங்கன்" ஆகிய பாண்டித்துரைத் தேவர் அவர்களால் கண்ணும் ஆவியும் போலக் கருதி வளர்க்கப்பெற்று

*இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் முப்பத்தோராவது வருஷோத்ஸவக் கொண்டாட்டத்தில் புலவர்கூட்டத்திலே படிக்கப்பட்டது.

வளர்ந்துவரும் நமது மதுரைத்தமிழ்ச்சங்கம் செய்துவரும் உழைப்பு நிறைந்த பேருதவிகளாலும், "பண்டையோர் நட்ட தண்டமிழ்ப் பயிர்க் கோர்-கொண்ட லென்னக் குவலயத் துதித்தோன்-புலமிக் கவருட் டில கன் சகுணன்-மண்டலா திபரும் மடாதி பதிகளும்-அந்தமில் சீர்த்திச் செந்தமிழ்ச் செல்வரும்-போற்றிப் புகழ்வான் புண்ணியப் பயனுல்-அருந்தமிழன்னைக் கணியெனப் பன்னூல்-தந்தருள் தூயோன் அந்தணர் பெருமான்" என்று எம்மனோரால் பெருமதிப்புடனும் பெருமிதத்துட னும் போற்றிப் புகழப்படும் ப்ருமமஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய உலையா முயற்சியும் சலியா உழைப்பும் சேர்ந்து தோன்றிய ஆராய்ச்சி நிறைந்த செந்தமிழ்நூற்கொடையாலும், சென்னைச் சருவகலாசாலையார் பரீக்ஷை நடத்தி அளித்துவரும் பட்டச்சிறப்பாலும் ஆண்டுதோறும் பல்கிப் பெருகிவரும் தண்டமிழ் அறிஞர்களுள் சிற்சில உழைப்பாளர் களின் நன்முயற்சியால் அத்தகைய தண்டமிழ்ச்சான்றோர்களான புலவர் பெருமக்களின் வரலாறுகள் தனியே நூல்களாகவும், பத்திரிகைகளின் வாயிலாகக் கட்டுரைகளாகவும் வெளிவருகின்றன. எனினும், ஆயிர கணக்கான பாக்களை ஆக்கியருளிய பலநூறு புலவர்பெருமக்களின் வ லாறுகள் அறியப்படவேண்டியநிலைமையிலேயே நமதுநாடு இன்று இருந்துவருகின்றது. இதுபற்றி இங்ஙனம் கூறுவது மிகையுமாகா தவறுபட்டதுமாகாது. இந்த நிலைமை விரைவில் நீங்குமாறு திருவரு பாலிக்கத் தண்டமிழ்த்தாயின் தாமரையடிகளையும், சான்றோர்களை தலைதாழ்த்தி வணங்கி வழுத்துகின்றேன்.

௨. போது.

இக் கட்டுரையால் ஆராயப்புகுந்த வரலாறு உலோச்சனர் என்னு புலவர்பெருமானைப் பற்றியதாகும். அந்த உலோச்சனர் தமிழ்ச்சங்க இறுதிக்காலத்தே திகழ்ந்த புலவர்பெருமக்களுள் ஒருவராவர். இவ இயற்றியருளிய பாக்கள், சங்கத் தொகைநூல்களுள் நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நான்கு நூல்களுள்ளும் தொகுக்கப்பெற்றுள்ளன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர்கள், இவருடைய பாக்களைத் தங்கள்தங்களுடைய தொல் காப்பியஉரையிலே மேற்கோள்களாகக் காட்டியிருக்கிறார்கள். இப்புலவ

பெருமான் அகப்பொருட்சுவைததும்பும்வண்ணம் நெய்தற்றிணையைச் சிறப்பித்துப்பாடுவதில் வல்லுநர் என்பது பல அறிஞர்களின் கருத் தாகும். இவர்பெயரால் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்ற மூன்று நூல்களிலும் தொகுக்கப்பெற்றுள்ள முப்பத்தொருபாக்களும் நெய்தற்றிணைபற்றியனவாகவே அமைந்திருப்பது இக்கருத்தை வலி யுறுத்தப் போதியதாம். "இவர் இயற்றியதன்று" என்று கருதுமாறு பெயர்குறித்த ஒரு பா இருப்பதுபோல, "இவர் இயற்றியனவே" என்று கருதுமாறு வேறு பல பெயர்குறியாத பாக்களும் உள.

"உமணர் தந்த வுப்புநொடை நெல்லின்
அயினி மாவின் றருந்த" (நற்-௨௱௪)

"நேர்கட் சிறுதடி நீரின் மாற்றி
வானம் வேண்டா வுழவினெம்
கானலஞ் சிறுகுடி" (நற்-௨௱௪)

"பெயினே,
விடுமா னுழையினம் வெறுப்பத் தோன்றி
இருங்கதிர் நெல்லின் யாணர தஃதே
வறப்பின்,
மாநீர் முண்டகந் தாஅய்ச் சேற்றுலர்ந்
திருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்
அழியா மரபினம் மூதூர்" (நற்-௩௱௧௧)

"உவர்விளை யுப்பி னுழாஅ வுழவர்" (நற்-௩௱௩௧)

"கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்
வண்டற் பாவை வரிமண லயர்ந்தும்
இன்புறப் புணர்ந்து மினிவாய் பயின்றும்
தன்றுயர் வெளிப்படத் தவறி நந்துயர்
அறியா மையி னயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ மெல்லம் புலம்பன்" (அகம்-௩௱௩௰)

என்ற பாக்களின் பகுதிகள் இங்கே சோ ஆராயத்தக்கன.

16617

வளர்ந்துவரும் நமது மதுரைத்தமிழ்ச்சங்கம் செய்துவரும் உழைப்பு நிறைந்த பெருதவிகளாலும், "பண்டையோர் கட்ட தண்டமிழ்ப் பயிர்க் கோர்—கொண்ட லென்னக் குவலயத் துதித்தோன்—புலமிக் கவருட் டில கன் சுகுணன்—மண்டலா திபரும் மடாதி பதிகளும்—அந்தமில் சீர்த்திச் செந்தமிழ்ச் செல்வரும்—போற்றிப் புகழ்வான் புண்ணியப் பயனல்—அருந்தமிழன்னைக் கணியெனப் பன்னூல்—தந்தருள் தூயோன் அந்தணர் பெருமான்" என்று எம்மனோரால் பெருமதிப்புடனும் பெருமிதத்துட னும் போற்றிப் புகழப்படும் ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய உலையா முயற்சியும் சலியா உழைப்பும் சேர்ந்து தோன்றிய ஆராய்ச்சி நிறைந்த செந்தமிழ்நூற்கொடையாலும், சென்னைச் சருவகலாசாலையார் பரீக்ஷை நடத்தி அளித்துவரும் பட்டச்சிறப்பாலும் ஆண்டுதோறும் பல்கிப் பெருகிவரும் தண்டமிழ் அறிஞர்களுள் சிற்சில உழைப்பாளர் களின் நன்முயற்சியால் அத்தகைய தண்டமிழ்ச்சான்றோர்களான புலவர் பெருமக்களின் வரலாறுகள் தனியே நூல்களாகவும், பத்திரிகைகளின் வாயிலாகக் கட்டுரைகளாகவும் வெளிவருகின்றன. எனினும், ஆயிர கணக்கான பாக்களை ஆக்கியருளிய பலநூறு புலவர்பெருமக்களின் வ லாறுகள் அறியப்படவேண்டியநிலைமையிலேயே நமதுநாடு இன்னு இருந்துவருகின்றது. இதுபற்றி இங்ஙனம் கூறுவது மிகையுமாகா, தவறுபட்டதுமாகாது. இந்த நிலைமை விரைவில் நீங்குமாறு திருவரு பாலிக்கத் தண்டமிழ்த்தாயின் தாமரையடிகளையும், சான்றோர்களை தலைதாழ்த்தி வணங்கி வழுத்துகின்றேன்.

உ. பொது.

இக் கட்டுரையால் ஆராயப்புகுந்த வரலாறு உலோச்சனார் என்னு புலவர்பெருமானைப் பற்றியதாகும். அந்த உலோச்சனார் தமிழ்ச்சங்க இறுதிக்காலத்தே திகழ்ந்த புலவர்பெருமக்களுள் ஒருவராவர். இவ இயற்றியருளிய பாக்கள், சங்கத் தொகைநூல்களுள் நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நான்கு நூல்களுள்ளும் தொகுக்கப்பெற்றுள்ளன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர்கள், இவருடைய பாக்களைத் தங்கள் தங்களுடைய தொல் காப்பியவுரையிலே மேற்கோள்களாகக் காட்டியிருக்கிறார்கள். இப்புலவ

441

பெருமான் அகப்பொருட்சுவைததும்பும்வண்ணம் நெய்தற்றிணையைச் சிறப்பித்துப்பாடுவதில் வல்லுநர் என்பது பல அறிஞர்களின் கருத் தாகும். இவர்பெயரால் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்ற மூன்று நூல்களிலும் தொகுக்கப்பெற்றுள்ள முப்பத்தொருபாக்களும் நெய்தற்றிணைபற்றியனவாகவே அமைந்திருப்பது இக்கருத்தை வலி யுறுத்தப் போதியதாம். "இவர் இயற்றியதன்று" என்று கருதுமாறு பெயர்குறித்த ஒரு பா இருப்பதுபோல, "இவர் இயற்றியனவே" என்று கருதுமாறு வேறு பல பெயர்குறியாத பாக்களும் உள.

"உமணர் தந்த வுப்புநொடை நெல்லின்
அயினி மாவின் றருந்த" (நற்-உ௫௪)

"நேர்கட் சிறுதடி நீரின் மாற்றி
வானம் வேண்டா வுழவினெம்
கானலஞ் சிறுகுடி" (நற்-உ௫௪)

"பெயினே,
விடுமா னுழையினம் வெறுப்பத் தோன்றி
இருங்கதிர் நெல்லின் யாணர் அஃதே
வறப்பின்,
மாநீர் முண்டகங் தாஅய்ச் சேற்புலர்ந்
திருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்
அழியா மாவினம் மூதூர்" (நற்-௩௧௧)

"உவர்விளை யுப்பி னுமரா அ வுழவர்" (நற்-௩௩௧)

"கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்
வண்டற் பாவை வரிமண லயர்ந்தும்
இன்புறப் புணர்ந்து மினிவாப் பலிர்ந்தும்
தன்றுயர் வெளிப்படத் தவறி நந்துயர்
அறியா மையி னயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ மெல்லம் புலம்பன்" (அகம்-௩௩௦)

என்ற பாக்களின் பகுதிகள் இங்கே சோ ஆராய்ந்தக்கன.

௩. ஊர்.

இப்புலவரைக் கடற்கரைக்கண் உள்ளதாகிய *காண்டவாயில் என்னும் ஊரினராகக் கருத இடமிருக்கின்றது.

"கலங்கு நீர்க்,
கழிசூழ் படப்பைக் காண்ட வாயில்
ஒலிகா வோலை முண்மிடை வேலிப்
பெண்ணை யிருவ மாங்கண்
வெண்மணற் படப்பை யெம் மழுங்கலூரே" (நற்—௩௮)

என்ற இப்பாவடிகளில் இப்புலவர் "காண்டவாயில் எம் அழுங்கலூரே" என்று கூறுவது இங்கே கருதத்தக்கது.

"பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங் கானற் புறந்தை முன்றுறை
வம்ப நாரை யினனொலித் தன்ன
அம்பல் வாய்த்த தெய்ய தண்புலர்
வைகுறு விடியற் போகிய வெருமை
நெய்தலம் புதுமலர் மாந்தும்
கைதையம் படப்பையெம் மழுங்க லூரே" (அகம்—௪00)

என்ற இப்புலவரது பிறிதொரு பாவிலும் "எம் மழுங்கலூரே" என்ற தொடர் பயிலுகின்றது. இப்பாவிலிவரது அழுங்கலூர் பொறையாற்று (புறந்தை)க் கடற்கரையைச்சேரவைத்துக் கூறப்பட்டுள்ளது. இதனால், அக் காண்டவாயில் என்னும் ஊர் கீழைக்கடற்கரைக்கண்ணதாகிய பொறையாற்றைச் சேர்ந்ததாகவோ அல்லது பொறையாற்றின்பக்கத்தில் இருந்ததாகவோ கருதவும் இடந்தருகின்றது. எனினும், அக் காண்டவாயில் யாண்டையது என அறுதியிட்டுக்கூற இயலவில்லை.

---

*இது, "கானடவாயில்" என இருக்கலாமா என்பதையும் ஆராய வேண்டும் எனத் தலைமைவகித்த ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே சாமிநாத ஐயர் அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள்.

௪ மரபு.

இவருடைய பாக்களில் நெய்தல்நிலத்தைப்பற்றிய எல்லாச்செய்திகளும் பெரிதும் பயின்றுவருகின்றன. அந்நிலவளங்களும் இடம்நோக்கிச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. அன்றியும், இவர் வேற்றுநிலங்களில் நிகழவேண்டிய செய்திகளையும் நெய்தல்நிலத்திலேயே அமைத்துப் பாடுவர். இவருடைய பாக்களால் சுவைக்கப்படும் எல்லாநயங்களும் பெரும்பாலும் நெய்தல்நிலத்தைச்சார்ந்தனவாகவே இருப்பதும் இங்கே ஆராயத்தக்கது. இங்ஙனம் அமைக்க இவர் நெய்தல்நிலத்திலே பெரிதும் ஊடாடிப் பழகியவராகவே இருத்தல்வேண்டும். இக்காரணங்களால் இப்புலவர்பெருமான் நெய்தல்நிலத்தினராகவே தோன்றியிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டாகின்றது. மேலும், இவரது புறநானூற்றுப் பா (௩௭௭) இவரை வேற்றுமரபினராகக்கருத இடந்தருகின்றதாயினும், இவருடைய எஞ்சிய பாக்கள், வேற்றுமரபினரால் எளிதில் அறிந்துகொள்ள இயலாத அத்துணை அரியனவாகிய நெய்தல்நிலச்செய்திகளை நுணுகிய முறையில் "குலவித்தை கல்லாமற் பாகம் படும்" என்ற பழமொழியை நினைப்பூட்டிக்கொண்டு, அறிவிக்கின்றமையால் இவரைப் பரதவர்மரபினராகக் கொள்ளலாம்போலும்! இஃது இன்னும் ஆராய்தற்குரியது.

௫. கோள்கை.

இவர், சோழமன்னர்களுள் ஒருவனான இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் புகழ்ந்து வாழ்த்திப் பாடியுள்ளார் (புறம்—௩௭௭). இராசசூயம் என்பது வேதவழிப்பட்டுச் செய்யப்பெறும் ஒரு சிறந்த வேள்வியாகும். அன்றியும், இவர் அப்பாவில் "அவியுணவினோர் புறங்காப்ப" என்று வேள்வியையும், வேள்வியின்பயனாக அளிக்கப்படும் அவியைத் தீக்கடவுளின்வழியாகப் பெற்று உண்ணும் தேவர்களையும் குறிப்பிடுகிறார். இவை இப்புலவர் வேதவழிப்பட்ட கோள்கையினையுடையவர் என்பதற்குத் தக்க சான்றுவன.*

---

*இப்புலவர்பெயரின் குறிப்பைக்கொண்டு இவர் ஜைனமதத்தினராக இருக்கலாம் என்பது அக்கிராஸனாதிபதிகளான ஐயரவர்கள் கருத்து.

௬. பண்பு.

இப்பெருந்தகையாளரிடம் மக்களுக்கு இன்றியமையாதனவாகிய பல சிறந்த நற்குணங்கள் நிலைத்திருந்தன என்றும் அறியலாகின்றது. அவற்றுட் சில வருமாறு:—

(அ) நன்றியறிதல்.

இவர் "உதவி வரைந்தன் றுதவி யுதவி—செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்ற தேவர்வாக்குக்கேற்பப் "பிறர்பிறர் சீரெல்லாம் தூற்று"பவர்போல, அயலார், தம்பொருட்டுச்செய்த உதவிகளை உலக மறியுமாறு விரித்துரைக்குமுகத்தால் நன்றியறியும் குணமுள்ளவர் எனக் கருதப்படுகிறார். இஃது இவர் இராசசூயம்வேட்ட பெருநற் கிள்ளியை வாழ்த்திப் பாடிய பாவால் அறியப்படும். அது பின்வருவது:—

"பிறர்க்குவமந் தானல்லது
தனக்குவமம் பிறிதில்லென
அறுநினைந்து மதிமழுகி
ஆங்குநின்ற வெற்காணூஉச்
சேய்நாட்டுச் செல்கிணைஞனை
நீபுரவலை யெமக்கென்ன
மலைபயந்த மணியும் கடறுபயந்த பொன்னும்
கடல்பயந்த கதிர்முத்தும்
வேறுபட்ட வுடையுஞ் சேறுபட்ட தசும்பும்
கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவினல்கியோ னசைசான்றோன்றல்" (புறம்–௩௭௭)

(ஆ) சிறுமை புறங்காத்தல்.

இவர், மக்கள் பிறரிடம் எங்ஙனம் பழகவேண்டும் என்பதை நாகரிகமுறையில் திறம்படக்கூறும் சிறப்புவாய்ந்தவர்; அச்சங் காரணமாகவோ அருள் காரணமாகவோ ஒன்றைக் கூறநேருங்கால் பிறர் அருவருப்புக்கொள்ளாமலும், பிறரால் பழிக்கப்படாமலும் அஃது அமைய வேண்டும் என்பதில் பெரிதும் கவலையோடிருப்பவர். அது,

"சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்ற" (நற்–௧௪௯)

என்ற வரிகளால் அறியப்படும்.

(இ) அன்பும் அருளும்.

இவர், உயிர்க்குணங்களுள் சிறந்தனவாகிய அன்பும் அருளும் நிரம்பிய பெருமைவாய்ந்தவர். இங்கே,

"புணரி பொருத பூமண லடைகரை
ஆழி மருங்கி னலவ னோம்பி
வாவவன் வள்பாய்ந் தூர" (நற்—௧௧)

என்ற பாவடிகள் உய்த்துணரத்தக்கன. இவ்வரிகள் காவல் மிகுதியால் தலைவனைக் கூடப்பெறாமல் வருந்தும் தலைவியை ஆற்றுவியாநின்ற தோழி கூற்றாக அமைந்த பாவின் பகுதியாகும். இதனுள் "அலவனுக்கு ஊறுபடாதவாறு தேர் செலுத்தப்படும்" என்றது "நீ பழிச்சொல்லால் வருந்தாதபடி வரைந்து இல்லறநிகழ்த்தற் கொருப்படுவான்" என்ற அன்புநிறைந்த கருத்தைத் தோற்றுவிப்பதும், "அலைவந்து மோதிய இளமணல் படிந்த கடற்கரையின்கண்ணே ஊர்ந்துவருகின்ற தேரின் ஆழியிடத்துப் படாதவாறு ஞெண்டுகளை விலக்கிப் பாகன் வாரைப் பிடித்து ஆராய்ந்துசெலுத்த" என்ற அருட்குறிப்புத்தோன்றுவதும் ஆராய்வோருக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவன.

(ஈ) நட்பு.

இவர், நட்டலின் அருமையையும், பிரிதலின் துன்பத்தையும் இனிது உணர்ந்தவர்; நட்பின் உயர்வினை அழகுபெற அறிவிக்கும் ஆற்றல்வாய்ந்தவர். இதனை,

"மணங்கமழ் கான லியைந்தநங் கேண்மை
ஒருநாள் பிரியினு முய்வரிது" (நற்–203)

"நெய்தன்மலர் போலப் பிரியிற் கலுழுமெனப்
பிறிதொன் றுகவா மஞ்சுவல்" (அகம்–300)

என்ற பகுதிகள் இனிதுவிளக்குவன. "நட்டபின்—வீடில்லை நட்பாள் பவர்க்கு" என்பதும் இங்கே கருதத்தக்கது. பிரிதலின் துன்பத்தை அறிந்தவரே சிறந்த நட்பாளராதல்கூடும் என்பது ஒப்பமுடிந்தது.

(உ) தேசாபிமானம்.

இவர், தாம் பிறந்த நாட்டைப் பெரிதும் போற்றிப் புகழும் சிறப்பு வாய்ந்தவர். இக்கருத்துக்குரிய இவருடைய பா வரிகள், மக்களாவார்

ஒவ்வொருவருக்கும் தாம் பிறந்த ஊரினிடத்திலே பெரும்பற்று இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவன. மேலும், இவர் தம்முடைய பாக்களிலே பல இடங்களிலும் "எம் ஊர்" என்று பெருமை பேசிக் கொள்கிறார்.

"நிலாவின் இலங்கு மணன்மலி மறுகில்
புலாலஞ் சேரிப் புல்வேய் குரம்பை
ஊரென உணராச் சிறுமையொடு நீருடுத்
தின்னு வுறையுட் டாயினு மின்பம்
ஒருநா ளுறைந்திசி னோர்க்கும் வழிநாள்
தம்பதி மறக்கும் பண்பி னெம்பதி" (அகம்-௨௦௦)

என்பது இங்கே அறியத்தக்கதாம்.

எ. தொழில்கள்.

இவர், தாம் வாழ்ந்தகாலத்தே தம்நிலத்தே நடைபெற்றுப் பயன் பட்டு வந்த தொழில்கள் சிலவற்றைப்பற்றியும் தம்முடைய பாக்களிற் குறிப்பிடுகிறார். அவையனைத்தும் குடிசைத்தொழில்களாகி இயற்கை யொடு பொருந்தி இலகுவில் நிறைவேறிப் பயனளிப்பனவாயிருத்தலும், ஆடம்பரமற்றுச் செல்வத்தைச் சேர்க்கத் துணைசெய்வனவாய் இன்றி யமையாதனவாகிக் குறையை நிறைப்பனவாயிருத்தலும் ஆராய்ந்து கைக்கொள்ளத்தக்கன.

(அ) புன்னைக்காய்களிலிருந்து நெய் எடுத்தல்.

"படுகாழ் நாறிய பராரைப் புன்னை
அடுமரன் மொக்குளி னரும்புவா யவிழப்
பொன்லி னன்ன தாதுபடு பன்மலர்
சூடுநர் தொடுத்த மிச்சில் கோடுதொறும்
நெய்கனி பசுங்காய் தூங்கும்" (நற்-௨௭௮)

(ஆ) கல்லுப்பு, வெள்ளுப்புக்களை விளைவித்தலும் விற்றலும்.

"கடுவெயிற் கொதித்த கல்விளை யுப்பு
நெடுநெறி யொழுகை நிரைசெலப் பார்ப்போர்
அளம்போ காருலம்" (நற்-௩௩௪)

"உவர்விளை யுப்பின் குன்றுபோ லுழவர்
ஒழுகை யுமணர் வருபதம்" (நற்-௩௩௮)

"செறுபுலர்ந்,
திருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்" (நற்-௩௧௦)

"உமணர் தந்த உப்புநொடை நெல்" (நற்-௨௫௪)

இவற்றுள், முன்னைய இரண்டுபாவடிகளால் உப்புவாணிகர் உப்புக் களை அளங்களிலிருந்து பண்டிகளில் ஏற்றிச்செல்லுதலும், இறுதிவரி யால் உப்புவிலையாக நெல்லைத்தருவதும் அறியப்படுகின்றன. இது, பண்டமாற்றுதல் என்னும் சிறந்தமுறையின் பயனைத் தெரிவிப்பதுடன் கூட்டுறவின் தத்துவத்தையும் தெரிவிப்பதாயிருக்கின்றது.

(இ) மீன்களைப் பதப்படுத்தல்.

"கான விட்ட காவற் குப்பைப்
புலவுமீ னுணக்கல்" (நற்-௩௩௧)

"பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கல்" (அகம்-௨௰)

(ஈ) கம்மத்தொழில்.

"எனையதூஉம்,
உறுவினைக் கசாவா வுலையில் கம்மியர்
பொறியறு பிணைக்கூட்டுத் துறைமணல்" (நற்-௩௬௩)

இதனுள், கடற்கரைக்கண் உள்ள ஒருவகை மணல் பணிபொருத்து வோர்க்குப் பயன்படும்செய்தி கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

அ. சில வழக்கங்கள்.

இவர், தம்முடைய பாக்களிலே இடம்நோக்கி அக்காலத்தில் வழங் கிய சில வழக்கங்களையும் அமைந்துபட அமைத்துக்கூறுவர்.

(அ) படருகளில் விளக்கேற்றிவைத்தல்.

"மனையிருந்,
திருங்கழி துழவும் பனித்தலைப் பரதவர்
திண்டிமில் விளக்க மெண்ணும்
கண்டல் வேலிக் கழிநல் லூரே" (நற்-௩௭௨)

"பெருந்திரை முழக்கமொ டியக்கவிந் திருந்த
கொண்ட லிரவி னிருங்கடன் மடுத்த
கொழுமீன் கொள்பவ ரிருணீங் கொண்சுடர்
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை
ஆடியல் யானை யணிமுகத் தசைத்த
ஓடை யொண்சுட ரொப்பத் தோன்றும்" (அகம்-௧௦௦)

இதனுள், பரதவர் இரவில் விளக்கின் துணைகொண்டு படகுகளைச் செலுத்தி மீன்களைப் பிடிக்கும் வழக்கமுண்மையும் அறியக்கிடக்கின்றது.

(ஆ) தேரிலே கோவேறுகழுதைகளைப் பூட்டுதல்.

"கழிச்சே றாடிய கணைக்கா லத்திரி" (நற்-௨௭௮)

௯. சில விளையாடல்கள்.

இவர், தம்முடைய பாக்களில் அக்காலத்தில் மகளிர் முதலாயினோர் நிகழ்த்திய சில விளையாடல்களையும் குறிப்பிடுகிறார்.

(அ) மகளிர் உப்புக்குவடுகளிலிருந்து படகுகளை எண்ணுதல்.

"உவர்விளை யுப்பி னுழாஅ வுழவர்
ஓகை யுமணர் வருபத நோக்கிக்
கான லிட்ட காவற் குப்பைப்
புலவுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
மடநோக் காயமொ டுடனூப் பேறி
எந்தை திமிலிது நுந்தை திமிலென
வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்
திண்டிமி லெண்ணுந் தண்கடற் சேர்ப்ப" (நற்-௩௩௧)

"திரையுழந் தசைஇய நிரைவளை யாயமொ
டுப்பின் குப்பை யேறி யெற்பட
வருதிமி லெண்ணுந் துறைவன்" (அகம்-௧௯௦)

(ஆ) ஊசலாடுதல்.

"ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூசறூங்கி" (அகம்-௨௦)

(இ) மணல்விளையாடலும், நீர்விளையாடலும்.

"சேரிழை மகளிர் வார்மண லிழைத்த
வண்டற் பாவை" (நற்-௧௯௧)

"வண்ட றைஇயும் வருதிரை யுதைத்தும்
குன்றோங்கு வெண்மணற் கொடியடும்பு கொய்தும்" (நற்-௨௫௪)

"கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்
வண்டற் பாவை வரிமண லயர்ந்தும்" (அகம்-௩௩௦)

இவற்றுள், பூக்கொய்தலாகிய பிறிதொரு விளையாடலும் கூறப்பட்டுள்ளது.

௧௦. இவர்காலத்திருந்தோர்.

இவர், இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளியையும், பொறையாற்று (நற்றேர்)ப் பெரியன் என்பவனையும் பாடியுள்ளார். அவை, முறையே புறநானூற்று (௩௭௭) ப்பாவினாலும்,

"நறவுமகி ழிருக்கை நற்றேர்ப் பெரியன்
கட்கமழ் பொறையாறு" (நற்-௧௩௧)

"பாடுநர் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங் கானற் புறந்தை" (அகம்-௧௦௦)

என்ற பாக்களின் பகுதிகளாலும் அறியப்படுகின்றன. இக்குறிப்பால் அக்காலத்தவர்களான சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை, தேர்வண் மலையன், அதிகமான், பாரி, ஓரி, கபிலர், ஔவையார் போன்ற(அரசர், வள்ளல், புலவர்)வர்களும் இவர்காலத்தினராதல்வேண்டும். வேறு பலரும் காணப்படுகின்றனர்.

௧௧. பாக்களின்சிறப்பு.

இவர், தம்முடைய பாக்களை இயற்கைநவிற்சி, உவமை, உள்ளுறையும் இறைச்சியும், வீரச்சுவை முதலிய சொன்னயம் பொருணயங்கள் செறிய அமைப்பதில் தலைசிறந்தவர். இவருடைய பாக்களில் உள்ளுறையுவமம், இறைச்சிப்பொருள் என்றவற்றுள் இரண்டுமோ அல்லது

ஒன்றோ பெரும்பாலனவற்றுள் பொதிந்திருக்கும். இன்றேல், மிகச் சிறந்த கருத்துக்களேனும் அமைந்திருக்கும். ஒரு நயமும் இல்லாத பாவே இல்லையென்னலாம்.

(அ) இயற்கைநவிற்சி.

"உருகெழு தெய்வமுங் கரந்துறை யின்றே
விரிகதிர் ஞாயிறுங் குடக்குவாங் கும்மே
நீரலைக் கலைஇய கூழை வடியாச்
சாஅ யவ்வயி றலைப்ப வுடனியைந்
தோரை மகளிரு மூரெய் தினரே
பன்மலர் நறும்பொழில் பழிச்சி யாமுன்
சென்மோ சேயிழை யென்றன மதனெதிர்
சொல்லாண் மெல்லியல் சிலவே நல்லகத்
தியாண ரிளமுலை நனைய
மாணெழின் மழைக்கண் டெண்பனி கொளவே"
(நற்—௩௯௮)

"கடல்பா டவிந்து கானல் மயங்கித்
துறைநீ ரிருங்கழி புல்லென் றன்றே
மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும்" (குறுந்—௧௭௭)

(ஆ) உவமை.

"இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத் தன்ன பாசிலை யகந்தொறும்
வெள்ளி யன்ன விளங்கிணர் நாப்பண்
பொன்னி னன்ன நறுந்தா துதிரப்
புலிபொறிக் கொண்ட பூநாறு குரூஉச்சுவல்
வரிவண் டூதலிற் புலிசெத்து வெரீஇப்
பரியுடை வயங்குதாள் பந்தின் றாவ" (நற்—௨௪௯)

இதனுள், இன்றியமையாச் சிறப்பினவாகிய இரும்பு, வெள்ளி, பொன் என்ற உலோகங்கள் உவமையாக அமைந்திருப்பது அறிந்து மகிழ்தக்கது. மற்றொன்றாகிய செம்பு என்னும் உலோகத்தை அறிவிக்க நீலத்தைக்குறித்தார்போலும்! களிம்புகலந்த செம்பு நீல நிறமாதல் காண்க.

(இ) உள்ளுறையும் இறைச்சியும்.

"உரவுக்கட லுழந்த பெருவலைப் பரதவர்
மிகுமீ னுணக்கிய புதுமணல் லாங்கண்
கல்லென் சேரிப் புலவற் புன்னை
விழவுநா றுவிளங்கிணர் விரிந்துடன் கமழும்
அழுங்க லூரோ வறனின் றதனால்
அறனி லன்னை யருங்கடிப் படுப்பப்
பசலை யாகி விளிவது கொல்லோ
புள்ளுற வொசிந்த பூமயங் கள்ளல்
கழிச்சுறா விலக்கு மிருஞ்சிறை யிவுளி
இனைதரு புரவியிற் சாஅஅம்
மணிநிறச் சேர்ப்பனொ டமைந்தநந் தொடர்பே" (நற்—௬௩)

இதனுள், இறுதி நான்குவரிகளில் "கழிச்சேற்றிலோடும் குதிரைகளினுடம்பிலேபட்ட சேறு கடல்நீரால் கழுவப்படும்" என்றது, "களவொழுக்கத்தை மேற்கொண்ட தலைமகள்மீதும், தலைமகன்மீதும் வரிய அலர் அவ்விருவரும் வரைந்துகொள்வதால் நீக்கப்படவேண்டும்" என்று கருத இடந்தருதலால் உள்ளுறையுவமமும், "மணற் பரப்பிலே பரதவர் மீனுணக்கலாலாகிய புலவுநாற்றத்தைப் புன்னைமலர் மணம்வீசுதலாற் போக்கிக் கமழாநிற்கும்" என்று முதல் நான்குவரிகளில் கூறியுள்ளது, "சேரியிடத்தே தலைவிக்காக எமர்பெறக்கருதிய பொருளாசையைத் தலைவன் சான்றோரைமுன்னிட்டுத் தரும் அருங்கலந்தருவதாலே போக்கி வரைவுமாட்சிமைப்பட முடிப்பானாக" என்று கருத இடந்தருதலால் இறைச்சிப்பொருளும் பொதிந்திருத்தல் ஆராய்தற்கது.

(ஈ) வீரச்சுவை.

"நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேலொழிந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே" (புறம்—௨௭௪)

(உ) பிற.

மேலே காட்டியுள்ள புறநானூற்றுப்பா,

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்ற திருக்குறளையும்,

"வேட்டம் பொய்யாது வலைவளஞ் சிறப்பப்
பாட்டம் பொய்யாது" (நற்-௩௮)

என்ற வரிகள்,

"நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்"

என்ற திருக்குறளையும் நினைக்குமாறு செய்கின்றன. இங்ஙனமே வேறு சுவைகளையும், நயங்களையும் இவருடைய பாக்களால் அறியலாகும்.

௧௨. முடிவுரை.

இதுகாறும் கூறிப்போந்த செய்திகள் இப்புலவர்பெருமானுடைய வரலாற்றுக்குறிப்பை ஒருசிறிது அறிவித்தல்கூடும். இங்கே கூறப்பட்ட அனைத்தும் அப்புலவர்தலைவருடைய பாக்களின் துணைகொண்டே அமைந்தவை. ஆராய்ச்சிவல்ல பெரியோர் இன்னும் விரித்தும் விளக்கியும் எழுதலாகும். நிற்க. இவ் வமைப்புமுறையில் அறியாமைகாரணமாக யான் தவறிக்கூறியிருத்தல்கூடும். அவையிற்றைப் பொறுத்தருளுமாறு அறிஞர்களைப் பன்முறையும் வேண்டிக்கொள்கிறேன். இங்ஙனமே இதுபற்றிய வேறுபல இன்றியமையாச்செய்திகளையும் கூறவேண்டியிருக்கலாம். ஆதலின், தவறுகளைத் திருத்தியும், குறைகளை நிரப்பியும் சீர்திருத்தும் நெறியால் அடியேனை நல்லாற்றுப் படுத்தருளுமாறு நல்லறிஞர்களை வேண்டிக்கொள்கிறேன்.

"நெய்தல் வளமுரைத்த நேர்மை யுலோச்சனார்
செய்தியிவை யென்றுசில செப்பினேன்—மைதீர்
புகழார் பெரியீர் புலவர் சிறப்பென்
றிகழாது கொண்மி னிசைந்து."

உவ. சா. வேங்கடராமன்,
நண்டமிழ்த்தொண்டன், கும்பகோணம்.

தமிழ்ச்சங்கம் செய்யவேண்டிய வேலை.

தமிழ்நாட்டிலே தமிழ் நன்னிலைக்குவரவேண்டி எத்தனையோசங்கங்கள் தோன்றி வளர்ந்து இருந்தஇடம் தெரியாமல் மறைந்தொழிந்தன வென்றசெய்தி அறியாத தமிழர் ஒருவருமிரார் என்பது நிச்சயம்.

அவ்வாறுதோன்றியவற்றுள்ளே மதுரைத்தமிழ்ச்சங்கமும் ஒன்று. எல்லாம்வல்ல இறைவனது இன்னருளால் இச்சங்கம் சென்ற முப்பத்தோராண்டாகத் தமிழ்க்குப் பாடுபட்டுவருகின்றது. இடையிடையே இச்சங்கத்துக்கும் பல இன்னல்கள் உண்டாயினும், அவை காரிய நிர்வாகிகளது சாமர்த்தியத்தாலும் தமிழினிடத்துள்ள அன்பாலும் ஆர்வத்தாலும் அப்போதைக்கப்போது களையப்பட்டிருக்கின்றது.

இச்சங்கத்தின் ஆதரவில் 'செந்தமிழ்' என்ற மாதப்பத்திரிகையும் 'செந்தமிழ்க்கலாசாலை'யும் நடந்துவருவதும் போற்றுதற்குரியதாம்.

சங்கத்தாரால் நடத்தப்படும் கலாசாலையிலேனும், வேறிடத்திலேனும் தமிழ்மொழிபயின்று சங்கத்தாரால் நடத்தப்படும் பரீக்ஷையில் தேறிய வித்வான்கள் வேறிடங்களில் தேறிய வித்வான்களைவிட எத்துணையோமடங்கு அறிவிற்சிறந்தவர்கள், தகுதியுடையவர்கள் என்பதிலும் யாதொரு ஐயமும் இல்லை.

சங்கத்திலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்' என்ற பத்திரிகையின் பிரயோஜனம் அதனை வாசிப்போரால் ஒருநாளும் மறக்க இயலாது. எனினும், அது காலத்திலே வாராதது மிகவும் வருந்தத்தக்கது. [ஆயினும், இரண்டுமூன்று திங்களாகக் காலந்தாழ்க்காது வருகின்றது.] இனியும் அவ்வாறே வெளிவர ஏற்பாடுடைபெறுமென்பது நம்பிக்கை.

செந்தமிழ்வாயிலாக இதுவரை கேட்டுமறியாத பல பழந்தமிழ்ச் சிறுநூல்கள் வெளியாயின. இனியும் பல வெளிவருதல் கூடுமென்பது நாம் எதிர்பார்க்கக்கூடியதொன்றில்லையேயாம். தமிழிலக்கியத்தைக்குறித்து ஆராய்ச்சி சிறிது நடக்கின்றதாயினும், இந்தக்காலத்துக்குவேண்டியதாகக்கருதப்படும் பலவிஷயங்கள் வெளியாவதற்குரிய முயற்சியைக் கொள்ளல்வேண்டும் என்பது எனது விண்ணப்பம்.

முதலாவதாக நமதுநாட்டுச் சரிதம் இதுவென இன்றும் பலர்—ஏன் எல்லோருமே—அறிந்துகொள்ளமுடியாதநிலையிலிருக்கின்றனர். அதற்குக் காரணம் அவை தமிழ்மொழியில் இல்லாமையே; அவற்றை

பொழுதுவதற்கான முயற்சி வேண்டும். இப்பகுதியைச்சார்ந்தது புறநாட்டார் நம்மைப்பற்றிக்கூறுஞ் செய்தி. தமிழ்நாட்டவரைப்பற்றிப் பிறர் எவ்வாறு கூறியிருக்கின்றனர், கூறுகின்றனர் என்று அறிந்து கொள்ளவேண்டியது நமது முதற்கடமையன்றோ? அவற்றையும் சுருக்கமாகவோ விரிவாகவோ வெளியிடவேண்டிய ஏற்பாடு சங்கத்தார் செய்ய வேண்டிய முக்கியகடமைகளில் ஒன்றாகும். அதனைவிட விரைவாகச் செய்யவேண்டிய காரியம், திரைகடலோடித் திரவியந்தேடிய பல தமிழ்ப் பெரியாரது செய்திகளாகும். இவர்களே தமிழ்மொழியைப் பர்மா, சீயம், சாவகம் முதலான தீவுகளிற் கொண்டுசென்று பரப்பியவர்களாவர்; இவர்கள்வரலாற்றை நாம் அறியவேண்டாமா?

இரண்டாவதாக இந்நாட்டிற்கு வேண்டியது 'ஸயன்ஸ்' என்ற பிரகிருதிசாஸ்திரம். இரசாயனசாஸ்திரம், பௌதிகதத்துவசாஸ்திரமிரண்டும் பள்ளிச்சிறுவரும் எளிதிலுணரும்படி எழுதப்படல்வேண்டும். அவற்றைப்போதிப்போரே அந்நூல்களை எழுதப் பெரிதுந் தக்கவராவர்.

இவற்றையெல்லாம்விடச் சிறந்ததாக இருப்பது, தக்காரை நன்கு மதிப்பதாகும். சென்ற முப்பத்தொரு ஆண்டாக நடாத்தப்பட்டுவரும் இச்சங்கத்தின் அவயவியாக இராத கற்றாரும் மற்றோரும் பலருண்டென்பது யாரும் ஒப்புக்கொள்ளுமொருசெய்தி. அவ்வாறு தகுதியுடையவர்களைச் சங்கம், தலைவர்மூலமாயேனும் விழாக்கூட்டமூலமாயேனும் கௌரவிக்கவேண்டுமென்பது எனது தாழ்மையானவிண்ணப்பம்.

முடிவாகக்கூறத்தக்கது செந்தமிழ்ப்பத்திரிகை இன்னும் சிறப்புற நடைபெறுவதற்கான வழிகளைக் கையாடல்வேண்டுமென்பதே. இவ்வளவுகாலமாகத் தமிழகத்தில் நீடித்துநின்ற கல்விசம்பந்தமான பத்திரிகை செந்தமிழ் ஒன்றே. அது சங்கத்தாரது ஊக்கத்தால் நடைபெறுவதாக அறிகின்றோமேயன்றி வாசகர்களாகிய தமிழ்மக்களது ஊக்கத்தால் நடைபெறுவதாகத்தெரியவில்லை. இதன் ஆண்டுச்சந்தாவோ மிகக் குறைந்த தொகையான ரூபா நான்கு. மாதமொன்றுக்கு ஐம்பத்தாறுபக்கங்கொண்டு வெளிவருகின்றது. பல நூல்கள் வெளியாகின்றன. இவ்வளவு அருமைவாய்ந்த மாசிகையைத் தமிழகம் ஏற்றுப் போற்றவேண்டியது தமிழர்கடமைகளி லொன்றன்றோ? ஆகவே தமிழராகிய நாம் செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்க்கமுயலல்வேண்டும்.

திரு. சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
முப்பத்தோராம்வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம்.

ஆங்கீரஸஹு மார்கழிமீ ௫, ௬ உ (1932ஹு டிசம்பர்மீ 19, 20 உ) களில் நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் முப்பத்தோராம் வருடக்கொண்டாட்டம், இம்மதுரைமாநகரில் சேதுபதி உயர்தரக் கலாசாலைக் கட்டடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதற்கு மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய புலவர்பெருமக்களும், செந்தமிழ்ச்செல்வச் சேதுவேந்தர் முதலிய புரவலர்களும் ஸ்ரீமான் R. S. சங்கரையரவர்கள் முதலிய நீதிபதிகளும், வழக்கறிஞரும் பிரபுக்களும் பிறரும் உள்ளூரிலிருந்தும் அயலூர்களிலிருந்தும் விஜயம் செய்து பெருங்குழுவாக நிறைந்திருந்தனர்.

௫ உ (19-12-'32.) மாலை 4 மணிக்கு மஹாஸபை கூடியது. தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர் இராமலிங்கம் என்பவர் கடவுள்வாழ்த்துக் கூறியபின் இச்சங்கத்தின் நிர்வாகஸபையங்கத்தினரான ஸ்ரீமான் K. இராமையங்காரவர்கள், இராமநாதபுரம் ஸமஸ்தானாதிபதிகளான மாட்சிமைதங்கிய ஷண்முகராஜேசுவர நாகநாத ஸேதுபதிமன்னரவர்களை இம் முப்பத்தோராம் வருடக்கொண்டாட்ட மஹாஸபைக்குத் தலைவராக வீற்றிருந்து சிறப்பிக்குமாறு வேண்ட, இச்சங்கத்தின் அங்கத்தினரும் புத்தக வர்த்தகருமான ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள் அதனை அனுமோதிக்க, இந்நகர் அட்வகேட் ஸ்ரீமான் A. ரங்கஸாமி ஐயரவர்கள் அதனை ஆதரித்துப்பேசியபின், ஸபையோர்கள் கரகோஷஞ்செய்து அங்கீகரிக்க, ஸேதுமன்னரவர்கள் அக்ராஸநத்தமர்ந்தார்கள்.

பின்னர், பாஷாபாரதுரந்தரர் ஸ்ரீமான் ம. வி. ராமாநுஜாசாரியரவர்கள் அக்ராஸநர்க்கு மாலைசூட்ட, இச்சங்கக்கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமத். பண்டித. ஹரிஹரையரவர்கள், சங்கத்தின் சார்பாகச் சந்த

கலாசாலையாசிரியர் ஸ்ரீமான் நல்லசிவன்பிள்ளையவர்களியற்றிய வரவேற்புப்பாடலைப் படித்தார்கள்.

அப்பால் அக்ராஸநாவர்கள் சங்கத்தை ஆதரிப்பது தமது குல தருமமென்றும், தாம் அதில் கடப்பாடுடையவரென்றும், தமிழை வளர்க்க அனைவரும் முயலவேண்டுமென்றும், சுருக்கமும் விளக்கமும் அமைய முன்னுரை கூறினார்கள்.

அதன்பின் சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால், சங்கத்தின் 31ம் வருட அறிக்கையும் இக்கொண்டாட்டத்துக்கு வரமுடியாதவர்களனுப்பிய தந்தி கடிதம் முதலியனவும் படிக்கப்பட்டன.

கனவான்களின் அபிப்பிராயம்.

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபைத்தலைவரான ஸேதுமன்னரவர்கள்தகுதியையும் இச்சங்கம் தமிழ்வளர்த்துவரும் திறத்தையும் பாராட்டி, மேலும், இச்சங்கத்தார் பல தமிழ்நூல்களை முயன்று வெளியிடுவதுடன் சங்கக் கலாசாலையை இன்னும் பலவகைகளால் அபிவிருத்தியடையச்செய்ய வேண்டுமென்றும் கூறினார்கள்.

ஸேதுஸமஸ்தான மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள், ஒருவர் தம் உள்ளக்கிடக்கையைப் பிறர்க்குணர்த்துதற்குப் பாஷையின் இன்றியமையாமையும், பாஷைகளுள் தமிழ் 'வீறதேறுந்தமிழ்' என்று பாராட்டப்பட்டமையும், எல்லாமதங்களும் தமிழை நன்குமதித்தமையும், அஃது இயற்கையான ஆற்றலுடையதாதலும், மகிழ்ச்சியும் வீடும் அளிக்குமாறும், முத்திறப்படுமாறும், தற்காலப்போறிஞர் தம்நூல்களில் புதிய ஆராய்ச்சிமுறைகளால் கண்டு நிறுவிய சில முடிபுகள் பண்டைத் தமிழ்நூல்களில் ஆங்காங்கு விரவிக்கிடத்தலும்பற்றி கம்பர், நாகூர், பாணர் சாத்தனார், பெரியவாச்சான்பிள்ளை, பட்டர் முதலிய பெரும் புலவர் கூற்றான் விளக்கி, இத்தகைய தமிழைப்புரத்தற்காக நிறுவப் பெற்ற இச்சங்கம், அக்ராஸனரவர்களின் முன்னோர்களாதரவுபெற்று வளர்ந்தவாறுமாறும், இச்சங்கக்கொண்டாட்டங்களில் தலைமைவகித்தார் பெருமையும், அவரால் சங்கம் அடைந்த நலனும், அக்ராஸனருடைய தமிழார்வமும் விளங்குமாறு பேசினார்கள்,

பண்டிதமணி. கதிரேசச்செட்டியாரவர்கள், தமிழின் இனிமை பெருமைகளும், அது மகிழ்ச்சியளிக்குமாறும்பற்றி விளக்கியும், மாணிக்க வாசகர் சிவபிரானைநோக்கி "அருமையில் எளிய அழகே" என்றதுகொண்டு அக்ராஸனரைப் பாராட்டியும், திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரை வரவேற்ற குலச்சிறைநாயனார் "சென்றகாலத்தின் வழுவிலாத்திறனு மினியெதிர்காலத்தின் சிறப்பும் இன்றெழுந்தருளப் பெற்றதேயாகும்" என்றதுகொண்டு ஸேதுமன்னர்பெருமானை வரவேற்று, இச்சங்கத்தை வாழ்த்தியும், இச்சங்கப்பரீக்ஷைகளின் தகுதியினையும், இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சங்கத்தின் அபிவிருத்திகருதிச் செய்து வரும் அரும்பெருமுயற்சிகளையும் நன்குமதித்துப், எல்லாரும் சங்கத்தின் அங்கத்தினராய்த் தமிழைவளர்க்க முன்வரவேண்டுமென்று வற்புறுத்தியும் பேசினார்கள்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பெரும்புலவர் சுவாமி விபுலாநந்தரவர்கள் இச்சங்கத்தையும் ஸபைத்தலைவரையும் பாராட்டியதுடன், பிறபல சங்கங்களினும் ஸருவகலாசாலைகளினும் மதுரைத்தமிழ்ச்சங்கமே சிறந்ததென்றும், பண்டும் பிறதேயங்களில் தமிழ்ச்சங்கங்கள் இருந்தனவெனினும் அவற்றுளெல்லாம் மதுரைச் சங்கமே சிறந்ததாயிருந்ததென்றும், சருவகலாசாலைகளுக்கும் தமிழ்ச் சங்கத்துக்கும் அவை வளர்க்கும் விடயங்களால் வேறுபாடுண்டென்றும், தமிழ்ச்சங்கமே தமிழை வளர்க்கத்தக்கதென்றும், தமிழுக்கு இடையூறுவந்தகாலத்துப் பண்டும் இன்றும் மதுரையே முன்னின்று அதனை நீக்கியதென்றும், தமிழ்வளர்ச்சிக்கேயன்றிச் சைவசமய வளர்ச்சிக்கும் அக்ராஸனரின் முன்னோர்கள் பேருதவிசெய்தனரென்றும் அவர்களுள் பாஸ்கரஸேதுபதி மஹாராஜா அவர்கள் சுவாமி விவேகாநந்தரால் பாராட்டப்பட்ட பெருமையுடையவரென்றும், இச்சங்கம் ஸேதுவேந்தராதரவில் வளர்ந்து வடமொழியினும் பிறமொழிகளினும் உள்ள பலவகை அரியநூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுத் தமிழ், மேன்மேலும் நூல்வளம்பெறச் செய்யவேண்டுமென்றும் பேசினார்கள்.

ஸ்ரீமான் M. S. இராமஸ்வாமி ஐயரவர்கள் தமிழ் பண்டு பிற தேயங்களிலும் பரவியிருந்ததென்றும், பிறதேசபாஷைகளிற் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றனவென்றும், சில—உதாரணங்காட்டி விளக்கி இத்தகைய ஆராய்ச்சித் துறையிலும் தமிழ்ச்சங்கம் முயலவேண்டுமென்று கூறினார்கள்.

ஸ்ரீருதை ஸ்ரீ சிவஞானயோகியவர்கள் மக்கட்டோற்றம் முதன் முதல் பூமியின் மத்யரேகையில் ஏற்பட்டதென்றும், அம்மத்யரேகையின் கடலில் மூழ்கிவிட்டதென்றும், அது முதற்சங்கமிருந்த தென்மதுரை முதலிய ப்ரதேசங்களென்றும், சால்டியன்பாஷை முதலியவற்றில் தமிழ்ச்சொற்கள் மிகக் கலந்துள்ளனவென்றும், இவ்வாறு கலந்த தமிழ்ச்சொற்களை ஆராய்ந்து வெளியிடுதல் நலமென்றும் கூறினார்கள்.

பின்னர், சங்கப்பரீக்ஷைகளில் முதற்றரத்தில் தேறியவர்களுக்குப் பரிசும் யோக்யதாபத்திரங்களும் அக்கிராஸநரால் வழங்கப்பட்டன. பரிசுபெற்றவருள் ஒருவரான புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஙா. கனகராஜையரவர்கள் தாமியற்றிய வாழ்த்துப் பாடலைப்படித்தார்கள்.

அதன்மேல், ஸபைத்தலைவரான ஸேதுமன்னரவர்கள், அறிவு வளர்ச்சிக்குப் பாஷை அவசியமென்றும், எல்லாருக்கும் அறிவூட்டும் பாஷையாகத் தமிழ் ஆகவேண்டுமென்றும், அதற்கேற்ற முயற்சியிலீடுபட்டால் தமிழ்ச்சருவகலாசங்கம் விரைவில் ஏற்படலாமென்றும், இச்சங்கம் அத்தகைய முயற்சியை மேற்கொள்ளல் நலமென்றும், அப்படி முயன்றால் அதற்குப் பொருளுதவிசெய்யப் பலர் முன்வரக்கூடுமென்றும், இத்தமிழ்ச்சங்கமே தமிழ்ச்சருவகலாசாலையாகலாமென்றும் சுருக்கமாகவும் அழகாகவும் முடிவுரை கூறினார்கள்.

பின்னர் இச்சங்கக்கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமான் நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய மங்களவாழ்த்துப்பாடலை ஷை கலாசாலையாசிரியர் ஸ்ரீமான் பண்டித ஹரிஹரையரவர்கள்படித்தார்கள். பாஷாபாரதுரந்தரர் ஸ்ரீமத் ம. வீ. ராமாநுஜாசாரியாரவர்களும், ஸ்ரீமான் செய்யிது முகமது ஆலிம் புலவரவர்களும் ஸபைத்தலைவருக்கும் ஸபையாருக்கும் வந்தனோபசாரங்கூறினார்கள். குன்னூர்ப்பெரியவீட்டு ஸ்ரீமான்

முத்துக்குமாரசாமிமுதலியாரவர்கள் ஸபைத்தலைவருக்கு வாழ்த்துக் கூறி மாலைசூட்டினார்கள். வந்திருந்தோர்க்கெல்லாம் சந்தன தாம்பூலாதிகள் வழங்கியபின் கடவுள்வாழ்த்துடன் இரவு 8 மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

௨௰ (20-12-1932) செவ்வாய்க்கிழமை காலை 8½ மணிக்கு மீண்டும் ஸபைகூடியது. ஸபையார்கள் வேண்டிக்கொண்டமைக்கிசைந்து மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் ஸபைத்தலைவராகவீற்றிருக்கக் கடவுள்வாழ்த்தின்பின் இச்சங்கத்துக்குக் காரியநிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பெற்றார்கள். [அப்பொழுது நிறைவேறிய தீர்மானங்கள் அடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.] அதுகாலை இச்சங்கத்தின் உபாக்ராசனராகத் தெரிந்தெடுக்கப்பெற்ற ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் தம் சரித்தொடர்பையுடைய இச்சங்கத்தின்வரலாறுகளை ஸபையாரின்மனங் கரைந்துருகுமாறுகூறியதுடன், தம்மை உபாக்ராஸநராகத் தெரிந்தெடுத்ததற்கும் நன்றி பாராட்டினார்கள்.

பின்னர்க் கும்பகோணம் கேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ஊ. சா. வேங்கடராமையரவர்கள் சங்கப்புலவரான உலோச்சனாரைப்பற்றித் தாம் எழுதிய வியாஸத்தைப் படித்தார்கள்.

அதன்மேல் சிதம்பரம் அண்ணாமலை சருவகலாசங்கத்துத் தமிழ்ப் பெரும்புலவர் சுவாமி விபுலாநந்தரவர்கள் இசைத்தமிழாராய்ச்சி என்ற பொருள்பற்றிப் பழைய தமிழ்நூல்களிலும் வடமொழிநூல் முதலியவற்றிலும் ஆராய்ந்துகண்ட அரிய விஷயங்களை ஸபையோர் பாராட்டுமாறு உபந்யஸித்தார்கள்.

அப்பால் ஸபைத்தலைவரான மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் நிகழ்ந்தவற்றைப் பாராட்டிக்கூறியபின் கடவுள்வாழ்த்துடன் காலைக் கூட்டம் நிறைவேறியது.

அன்று மாலை 4-மணிக்கு மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் தலைமையில் மறுபடியும் ஸபை கூடிற்று. கடவுள் வாழ்த்துக்குப்பின் கும்பகோணம் அரசாங்கக்கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான் பண்டித அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் அசநிக்கோவை என்ற விடயம்பற்றி

ஆராய்ச்சிமுறையில் ஒருபந்யாஸம் செய்தார்கள். தலைவரவர்கள் பிள்ளையவர்களுடைய ஆராய்ச்சித்திறத்தைப் பாராட்டி, மேலும், ஆராய்ச்சிக்குதவுவன பழந்தமிழ் நூல்களேயென்றும் நந்தமண்டலசதகமுதலியனவாக இக்காலத்தவரால் நூதனமாகச் சிருட்டிக்கப்பட்ட நூல்கள் மேற்கோளாகக்கொள்ளத்தக்கனவல்லவென்றும் கூறினார்கள்.

அதன்பின் ஸேதுமன்னர்பெருமானும் இச்சங்கத்தின் அக்ராஸநருமான மாட்சிமைதங்கிய ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதி மஹாராஜா அவர்களோடு தமிழ்ப்புலவர் பெருமக்களும் பிறரும் வீற்றிருக்கப் புகைப்படமெடுக்கலாயிற்று.

பின்னர் எட்டயபுரம் ஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத் திரு. வி. சாமிஐயங்காரவர்கள் திருக்குறளும் வடமொழி நூல்களும் என்ற விடயம்பற்றி ஸ்ரீராமாயணம், பாரதம், பாகவதம், மநுஸ்ம்ருதி, வாமநபுராணம் முதலிய வடமொழி நூல்களிற் பயின்ற சொற்பொருட் கருத்தமைதிகள் திருக்குறளில் ஆங்காங்கு ஒன்றியமைந்து காணப்படுதலை நன்கு விளக்கி உபந்யஸித்தார்கள்.

அப்பால் யாழ்ப்பாணம் ஸ்ரீ S. இராஜஐயனாரவர்கள் அத்துவித உண்மை என்ற பொருள்பற்றி உபந்யஸித்தார்கள்.

அதன்பின் மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிக சாஸ்த்ர ஆசிரியர் ஸ்ரீமான் N. R கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் (M.A.) தாம் ஆராய்ந்து எழுதிய பிரபஞ்சத்தின் அமைப்பு என்ற அரிய பொருளுரையைப் படித்தார்கள்.

பின்னர் உலகியல்விளக்க ஆசிரியர் ஸ்ரீமான் K. S. நவநீதகிருஷ்ண பாரதியவர்கள் தாம் இயற்றிய சில செய்யுட்களைப் படித்தார்கள்.

அதன்மேல் அக்ராஸனரவர்கள் நடந்த வுபந்யாஸங்களைப் பாராட்டிப் பேசியபின் வந்தநோபசாரம் கூறவும் கடவுள்வாழ்த்துப் பாடவும் இரவு 8 மணிக்கு ஸபை இனிது நிறைவேறியது.

உதவிப்பத்திராசிரியர்.

ஆங்கீரஸ௵ மார்கழிமீ ௫௨ (19-12-1932) நிகழ்ந்த
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
முப்பத்தோராம் வருஷோத்ஸவத்துக்கு
அக்ராஸநராக விஜயம்செய்த
ஸ்ரீமது ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுலதிலகர்களாகிய
மாட்சிமைதங்கிய

ஸ்ரீஷண்முக ராஜேசுவர நாகநாத ஸேதுபதி மஹாராஜா அவர்களுக்கு

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் அளித்த

வரவேற்புப் பத்திரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர்

சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியது.

நிலைமண்டில ஆசிரியப்பா.

உலகம் ஆக்கியும் காத்தும் ஒடுக்கியும்
அலகில் ஆடல்செய் ஆதியங் கடவுளின்
அருள்வழித் தோன்றி அவனிமன் பதைகட்கு
இருமையின் பயனும் பெருமையின் உதவும்
தெய்வத் தமிழ்மகள் சிறப்புடன் ஓங்க
முதல் இடை கடையெனும் மும்மைச்சங்கம்
முடிபுனை மன்னர் முன்புரிந் தாங்குப்
பாலவ னத்தப் பதிவேந் தென்னும்
பாண்டித் துரைப்பெயர் வேண்டிற் றருள்முகில்
எண்ணிய வெண்ணியாங் செய்தினர்க் கருளும்
புண்ணிய சேது புரந்தருள் பூபனும்
பாஸ்கர சேது பதிமன் தனைகொடு
மாட மலிநான் மாடக் கூடற்
பாடல்சால் மதுரைப் பழம்பதி தன்னில்
நலமுடன் நிறுவிய நான்காஞ் சங்கம்

முப்பான் ஒன்றென மொழியுநல் வயது
பெற்றிவண் வளரும் பெட்பமை யாண்டின்
விழா அவைத் தலைமை விழைவுடன் ஏற்றே
ஈண்டெழுந் தருளிய இன்தமிழ் வேந்த!
சேது காவல! செம்பிநாட் டிறைவ!
மூதவையர் பெரும! முத்தமிழ் ஆகர!
வையையந் துறைவ மால்புட் கேதன!
முல்லையந்தார்ச் சண்முகராஜேச்வர
நாக நாத நரேந்திர! வருக!
மன்னர் மூவர் வளர்த்தநீந் தமிழை
இந்நில வரைப்பில் இந்நாட் காப்பவர்
சேதுமன் னவரெனச் செகதலம்புகலும்
மாண்புறு மரபின் வந்தோய் வருக!
சால்புறுமதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
நிரந்தர அதிபதி யெனும்பெருந் தலைமை
ஏற்று வீற்றிருந்த இராஜராஜேச்வர
முத்துராம லிங்க முகில்கற்ப தாரு
பாவலர் தம்மைப் பாலனம்புரிவோன்
தீந்தமிழ்ப் பாச்சுவை தெரிந்தக மகிழ்வோன்
தவத்தினி லுதித்த தராபதி வருக!
வருக! வருக! மகிபநின் வரவு
நல்வரவாகுக! ராசகாரியங்கள்
எத்துணையோ நிற் கிருப்பினும் அவற்றிடை
இன்தமிழ் புரப்பான் இவண்போந் தருளிய
அருள்நிறை முகில்! நினக் காற்றுகைம் மாறெவன்
பெய்ம்முகிற் கென்னே பேருலகம் செயும்
கைம்மாறு! ஈதுநின் கடப்பா டாதலின்
தந்தைசெய் கடமை மைந்தற் குரியதென்று
அந்தமிழ் புரத்தற்கு அடைந்தனை அரசே!
வேறுபசாரணை விளம்புதற்கஞ்சினம்
செந்தமிழ் காத்துச் சிறப்புற வேண்டினம்
வாழ்கநின் கொற்றம் வாழ்கநின் சுற்றம்
வாழ்கநின் வண்மை வாழ்க நின்கீர்த்தி
வாழ்கநின் குடிகள் வாழ்கநின் வளங்கள்
வாழ்கநின் வாழ்நாள் வாழ்கநின் முறையே.

ஸ்ரீ:

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்
31ம் வருடக்கொண்டாட்டத்தில்

பண்டித. நா. கனகராஜையரவர்கள் தங்கக்கடகம் பரிசுபெற்றபோது கூறிய

வாழ்த்து.

அமுதூறும் தமிழெனும் ஆழியிற் படிந்து
புலத்துறை முற்றிய புண்ணிய ராகிய
புலனழுக் கற்ற புலவோர் பலராற்
பண்டைநாள் நந்தம் பாரத நாட்டிற்
செழியருஞ் சேரருஞ் சென்னியர் தாமும்
ஒருமன மாக வுரிமையின் வளர்த்த
சங்கத் தமிழ்நலம் பொங்கிப் பொலிகெனச்
சிரத்தையிற் றுங்கிய சேது மரபினர்
நாட்டி விளங்கிய நான்காஞ் சங்கத்
தறிவினர் குழீஇய வவைக்களத் திடையே
முப்பது மொன்று முறையே நடந்தன
ஆண்டுநல் விழவினில் அடியனை நோக்கித்
தவப்பணி யாகத் தமிழ்ப்பணி பூண்டென
நற்பணி யாகிய பொற்பணி பூட்டிய
ராஜ ராஜ நாதிபன் மைந்தனும்
நாகநாத ஷண்முக நரபதி
ராஜராஜேச்வரி நறுமலர்ச் சேவடி
சிரமிசை நிறுத்திய செல்வன் வாழிய
பெரிய நாயகி யுரிமை யடிமைடசம்
புதுவைமன் வாழிய முதுமையும் இளமையும்
ஒருங்கே பொருந்திய வுயர்தமிழ் வாழிய
சங்கமும் புலமையும் தழைத்து வாழியவே.

உ

ஆங்கீரஸ௵ மார்கழி௴ ௫௳ (19-12-32) நிகழ்ந்த

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

முப்பத்தோராம் வருஷோத்ஸவ

மங்களவாழ்த்து.

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை ஆசிரியர்

ஸ்ரீமான். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியது.

சேது காவல ராகி நீடுறு மரபினுக்கொரு சேகரன்
செம்பொன் மால்வரை யென்ன வேயுயர் தீர வீர பராக்ரமன்
தாது சேர்தரு சோலை சூழ்வுறு தன்மைசார் மதுரைத்தமிழ்ச்
சங்கம்வாழ்வுறவந்தமேதகுதலைமைதாங்கியநிலைமையோன்
ஓது பாவலர் மிடியிருட்பகை யோட்டு பாற்கர மன்னனோடு
ஒத்து வாழ்குண சீல னென்ன வுதித்த சோதர ரத்தினம்
மீதுலாவரு பரிதி போன்று விளங்கி யெங்கணும் ஒளிசெயும்
மேன்மையோங்கியதினகரப்பெயர்வித்தகன்புகழ்வாழ்கவே.

திருவளர் சண்முகராஜேச்வர நாக நாத
சேதுபதி வாழ்க தமிழ் சிறந்து வாழ்க
பெருவளஞ்சேர் எழின்மதுரைத் தமிழ்ச்சங்கம் வாழ்க
பேசுதமிழ்ப் பேரவையோர் பெரிது வாழ்க
அருள்வளர் ஐந்தாம் ஜார்ஜு மன்னர்பிரான் இந்த
அவனியெலாம் ஒருகுடைக்கீழ் ஆண்டு வாழ்க
பொருள்வளர்நூ லனைத்துமொரு தனிமுதலென் றுரைக்கும்
பூரணன்றன் திருவருளாற் புகழ்மிக் கார்ந்தே.

உ

மதுரைத்தமிழ்ச்சங்க வாழ்த்து.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

ஸ்ரீமான். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியது.

புவன நாயக னாகி யுயிர்தொறும்
பொருந்தி யெள்ளினெய் போலுறை பூரணன்
சிவன லாதிலை யென்றெனும் பத்திமைச்
சிந்தை தூயரிற் செப்பு முதன்மையோன்
இவன லாதிலை யென்னல கேத்திடும்
ஏற்ற மேவிய பாண்டித் துரைப்பெயர்க்
கவன மாமன னீடு நிலைபெறக்
கண்ட னன்மது ரைத்தமிழ்ச் சங்கமே. (1)

இன்ன சங்கத்தை நாட்டுதற் கன்னவற்
கெண்ணில் செம்பொ னினிதி னுதவிய
மன்னன் பாற்கர சேது பதிப்பெயர்
வள்ள லீன்ற வருகுண வாரிதி
நன்ன லம்புனை ராஜரா ஜேச்வர
நாம னாமுத்து ராமலிங் கேந்திரன்
தன்ன கங்களி கூர்ந்து தமிழ்ச்சங்கத்
தலைவ னாகிமுன் றாங்கினன் சாலவே. (2)

அந்த மன்னற்குப் பின்னரா மன்னவற்
கந்த னுக்கிளை யோனெனு மன்புசால்
புந்தி யன்ன தினகர பூபதி
போற்றி னானதை பேற்றுப் புகழுடன்
றந்தை யாலுமு தாதையி னாலுமுன்
றாங்கு சங்கத்தைத் தாங்குவன் யானென
வந்து தாங்கினன் ராஜரா ஜேச்வர
மன்னன் மைந்தன் மகிழ்ந்து தலைமையே. (3)

பத்தொன் பானூற்று முப்பத் திரண்டெனப்
பகரும் யாண்டு டிசம்ப ரிருபதாம்
உத்த மத்தமிழ் ஆங்கி ரசப்பெய
ருற்ற ஆண்டு தனுரவி யாதினில்

முத்த மிழ்மது ரைச்சங்க நாயக
முதன்மை யேற்றனன் முதறி வோருளம்
நத்து சண்முக ராஜேச் வரநாக
நாத நாம நரேந்திர பூபனே. (4)

பாடு வோர்க்குப் பசும்பொனுந் தேசமும்
பரிசி னல்கும் பரிதி குலாதிபன்
நீடு சங்க நிரந்தர போஷக
நிருப னென்னத் தலைமை நிலவுவோன்
கூடு வண்மை முகவையர் கோவெனுங்
கொற்ற முற்ற குணாகர னற்புகழ்
நாடு சண்முக ராஜேச் வரநாக
நாத நாம நரேந்திரன் வாழ்கவே. (5)

மூவேந்த ரெனுஞ்செம்பொன் முடிபுனைவேந்
தருக்குப்பின் முகவைச் சேது
மாவேந்த ரேதமிழை வழிவழிகாப்
பவரெனுஞ்சொல் வழக்க மோங்கத்
தேவேந்த்ர தாருவெனுஞ் சண்முகரா
ஜேச்வரப்பேர்ச் சேது வேந்தன்
பூவேந்தர் புகழ்மதுரைத் தமிழ்ச்சங்கத்
தலைமையுற்ற புனித மாண்பும். (6)

சீரோங்கு தமிழ்ச்சங்க மதுரையினி னூட்டியருள் சிமானனை
பேரோங்குபுகழ்ப்பாண்டித் துரையிருந்து புரப்ப துபோற்பேணிச்சங்கம்
ஏரோங்கப் புரப்பதுதன் கடமைகளுண் முதற்கடமை யென்னக்கொண்ட
நீரோங்கு கடலுலகந் துதிசீனி வாசப்பேர் நிலவுந் தூயோன். (7)

செந்தமிழி னுயர்சங்கத் துணைத்தலைவ னாகியிங்குத் திகழு மாண்பும்
அந்தமிழ்ச்சங் கத்திறையாய் வீற்றிருந்த சுந்தரன்பே ரணிந்த சோம
சுந்தரபா ரதியோனும் பைந்தமிழின் பின்சென்ற தளவோன் பத்தி
சந்ததமு மிகுகிருஷ்ண சாமிப்பேர் புனைவனசத் தாரி னோனும் (8)

பேரியல் சங்கத்தின் பெருமை மாண்புறக்
காரிய தரிசிக ளான காட்சியும்
சீரியல் புலவர்கள் செகத்தில் முன்செய்த
ஏரியல் புண்ணிய மென்ன லாகுமே. (9)

ஸ்ரீ:

மங்கலவாழ்த்து.

(மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர்)

ஜே. நாராயணசுந்தரம் ஐயங்கார் இயற்றியது.

தண்மலர் மீதமர் தருதிரு சந்ததம்
வெண்மலர் மாதோ டுறைவுறு மன்பதை
தந்நெறி மாறு முறைபுரி செம்பியர் தழைசேது

தன்னமு தாலே காவல டைந்தவர்
வெம்மல நீறு விரிதர வின்புகழ்
தன்மைகொ ளுடாள் பவருள் விளங்கொளி தனைசேர்வான்

மண்மகள் முவை வதனமி ழென்றமை
யும்பிழை மூனூர் முகனைசெ யுந்தவ
மன்னியல் மாறு கானெவ ருந்துதி மதிமேலோன்

மம்மரு ருமே திமிரற வெச்சொளிர்
செம்மையி னோர்சால் தினகர னெண்டிசை
மன்னிய தோரர் மாபினில் வந்திடு வாசிலன்

ஷண்முக ராஜேஸ் வரமில மங்கல
துன்னிய தோலா மொழியவை சஞ்சல
தன்னிய நாதா தருமது ரந்தர தரணீசன்

சந்நிதி யாறு மதுரைந பூந்தமிழ்
மிக்கரு வோவா மிளிர்தரு சங்கதி
தம்முற மேவோர் தலைவனெ னும்படி வரலாளன்

வண்மொழி யீந்த வளர்பெற முந்தமர்
தென்முக னமா லெழுமிவ ணம்பெரு
மன்னரு ளாலே புலவர்பெ ருங்குழு விடைமேய

மன்னவ னுரேச் வரனென மிம்பரி
னெண்ணிறை சீர்வாழ் வுறவிசை சங்கமு
மண்மிசை மாபா லகர்களு மங்கமு மிகவாழி.

மதிப்புரை.

1. இரகுவம்மிச மூலமும் உரையும் (இரண்டாம்பாகம்):- இது, அரசகேசரி என்பவர் வடமொழியினின்றும் மொழிபெயர்த்தியற்றிய தமிழ்ப்பாடலான காவியத்தில் அயனுதயப்படலம் முதல் இந்துமதி பிறப்புநீங்குபடலம் முடியவுள்ள பகுதிக்கு வித்வான் ஸ்ரீமத் சி. கணேசையரவர்களெழுதிய உரையுடன் பதித்து வெளியிடப்பெற்றிருக்கிறது. இப்புத்தகம் தமிழ்கற்பவர்களால் விரும்பிப்படிக்கத்தக்கது. இதில், படிப்பவர்களுக்குப் பொருள் எளிதில் விளங்கும்படி பதவுரையும் இடையிடையே வேண்டுமிடங்களிற் குறிப்புரையும் வரையப்பட்டுள்ளன. 324 பக்கங்களடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் சி. கணேசையரவர்கள், சுன்னாகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உரியோரிடம் பெறலாம்.

2. திருக்குறுங்குடி அழகியநம்பி உலா :- இது திருக்குறுங்குடியிற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் திருமால் உலாப்போதலைப் பொருளாகக்கொண்டு பாடப்பட்டிருக்கிறது. 184 கண்ணிகளையுடையது. இதனுள் திருக்குறுங்குடியில் நிகழ்ந்த பல சரிதங்கள் சொல்லப்பட்டுள்ளன. செய்யுணடை தெளிவும் இனிமையும் உடையது. காவிய நடை பயிலும் தமிழ்மாணவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. இதனைச் சென்னைச் சருவகலாசங்கத் தமிழ்லெக்ஸிகன் பதிப்பாசிரியர் ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் (B A. B L) நன்குபரிசோதித்து அச்சிட்டிருக்கிறார்கள். இதன் இறுதியிற் சேர்த்துள்ள அநுபந்தத்தில் சரித்திரத்தொடர்புடைய இந்நூற்கண்ணிகள் சிலவற்றைப்பற்றிப் பதிப்பாசிரியர் எழுதியுள்ள குறிப்புக்கள் ஆராய்ச்சியாளர்க்கு உபயோகமாவன. இத்தகைய தமிழ்நூல்கள் பலவும் பரிசோதித்து அச்சிட்டுதவுதல் தமிழறிஞர்க்குப் பெரும் பயனளிக்கத்தக்கதே.

3. குருகூர்ப்பள்ளு:- இது, சடகோபப்புலவர் என்பவரால் பாடப்பட்டது; 106 செய்யுட்களை உடையது. இதனை ஆழ்வார்திருநகரி ஸ்ரீமான் பெரியன். வே. நா. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பரிசோதித்து அச்சிட்டிருக்கின்றார்கள். இதற்குச் சென்னைச் சருவகலாசங்கத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் ஸ்ரீமத் S. வையாபுரிப்பிள்ளை (B.A., B.L,) அவர்கள் விரிவாயெழுதிய முன்னுரையொன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் பள்ளுப்பிரபந்தத்தின் வரலாறுகளெல்லாம் நன்கு அறியலாகும். இதன் விலை அணா 6.

4. ஆழ்வார்கள்வைபவங்கள்:— இது, வடிவழகியநம்பிதாஸரியற்றிய குருபரம்பரையின் முதற்பாகத்தில் முதலாழ்வார்பிரபந்தம் என்ற பகுதி 27 செய்யுளும், பெரியாழ்வார்பிரபந்தம் என்ற பகுதி 152 செய்யுளும் கூட்டி ஒருபுத்தகமாகப் பரிசோதித்து ஆழ்வார்திருநகரி ஸ்ரீமத் பெரியன். வே. நா. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இதிலுள்ள செய்யுட்கள் இனிய செம்பாகமான நடையானமைந்துள்ளன. இந்நூல் முழுதும் ஒரு புத்தகமாகப் பதிக்கப்பெற்று வெளிவருமாயின் வைணவத்திலும் அடியார் சரிதங்கள் பற்றிப் பாடப்பெற்ற புராணங்களுண்டென்பது விளங்கும். இத்தகைய பாடல்கள் பலவற்றை ஆராய்ந்து பதிந்துவரும் ஐயங்காரவர்களது தமிழபிமானம் பாராட்டத்தக்கது.

5. சிவாநந்தலகரி:-இது, மதுரைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் மு. கோவிந்தஸாமிஐயரவர்களால் வடமொழியிலுள்ளவாறே தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுளாக இயற்றப்பெற்றிருக்கிறது ஒவ்வொரு செய்யுளும் பத்திச்சுவைதோன்றப் படிப்பவர் மனமுருகும்படி இனிமையும் தெளிவும் இயைந்த தமிழ்நடையிற் பாடப்பெற்றுள்ளன. இத்துதிமாலை பாராயணம்செய்பவர்களுக்கு மிகவும் உபயோகப்படத்தக்கது. இப்பிரபந்தம் தன்னை இயற்றிய ஐயரவர்கள்பெயரை என்றும் நின்று நிலவச்செய்யவல்லது.

6. பாண்டிமண்டலசதகம்:-இது, சீகாழிக் கன்றுடைய வள்ளல் சந்தானத்து முத்துச்சட்டைநாதவள்ளலவர்களால் பரிசோதிக்கப்பட்டு, சீகாழி வித்வான் ஸ்ரீமத். ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்களால் அச்சிடப்பெற்றது. பாண்டிநாட்டில் நிகழ்ந்த பல சரிதங்கள் இதன்கட் சொல்லப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படத்தக்கது. வேண்டுவோர் 'அ. பொ, இராமையா பிள்ளை, காராள சற்குணஸபை, வைத்தீசுவரன்கோயில்' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

7. பாலபோத விவேகாநந்த சரிதம்:— இது, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச்சார்ந்த ஸ்வாமி கேதாரேசுவராநந்தரவர்களால் எழுதப்பட்டது. இதில் ஸ்வாமி விவேகாநந்தருடைய பால்யப்பருவம் தொடங்கி நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவும் பத்துப்பகுதிகளாகப் பிரித்துப் பாலர்களும் படிக்கும்படி நன்றாயெழுதப்பட்டுள்ளன. அவை படிப்பவர்க்கு ஸமரஸபாவம், மனத்திருத்தம், ஆஸ்திகபுத்தி முதலிய பல குணங்கள்

அளிக்கத்தக்கன. இப்புத்தகத்தின் விலை சாதாரணபைண்டு அணா ஏழு. காலிகோபைண்டு அணா பத்து. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ணமடத்திற் பெறலாம்.

8. ஸ்ரீமுகவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:— இது, யாழ்ப்பாணம் பருத்தித்துறைச் சோதிடகணிதசித்தாந்தி ப்ரும்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அநுமதிப்படி சோ. வைத்தியநாதசாஸ்திரிகளால் கணிக்கப் பட்டது. இதில் வழக்கப்படி சேர்க்கும் பல விஷயங்களுடன் விரத தினங்களும் சிராத்ததிதிகளும் முகூர்த்தகாலங்களும் நன்கு நிர்ணயஞ்செய்து குறிக்கப்பட்டுள்ளன. அன்றியும், ஏர்மங்கலம் முதலிய பல விடயங்கள் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி தெளிவாய் எழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா 4. தபாற்செலவுடன் அணா 5. வேண்டுவோர் சோ. வைத்தியநாதசாஸ்திரிகள், ஸரஸ்வதியந்திரசாலை, பருத்தித்துறை இலங்கை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

9. இளைஞர்பாடல்கள்:— இது, கோவைத்தமிழ்ச்சங்கத்தின் அமைச்சரான ராவ்ஸாஹிப் ஸம். ராமச்சந்திரஞ்செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. இக்காலத்துக்கேற்ற புதியமுறைகளைத் தழுவிப் பாடிய பலவகைப்பாடல்களை உடையது. பாடல்கள் எளிதிற் பொருள் விளங்கத்தக்கன. கருதியபொருளின் குணநலங்களையும் செயல்களையும் கொண்டு வரையும் கட்டுரைபோன்ற பாடல்கள் பாடப்பயில்வார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கன. இப்புத்தகம்வேண்டுவோர், கோவைத் தமிழ்ச்சங்கத்திற் பெறலாம்.

10. விசித்திர தேவலோகக் கோர்ட்டுக் கேசுகள் (முதற் பாகம்):— இது ஸ்ரீமாந். P. சுப்பராமையர் அவர்களால் எழுதப்பெற்றது. இதில் ஏரகத்துச்செட்டியார் கேஸ், நந்தி மானநஷ்ட கேஸ், கிருஷ்ணபரமாத்மா ஜாமீன்கேஸ் என்னும் மூன்றுவிஷயங்கள் அடங்கியுள்ளன. இவை யாவரும் விரும்பி வாசிக்குமாறு மிக்க சாதுரியமாக அமைந்திருக்கின்றன. கோர்ட்டின் நடவடிக்கைகளைப்போலவே ஈசுவராதிகளின் செயல்களை எடுத்துக்காட்டி, பலரிடத்துப் பக்தியை விளைவித்தலே இப்புத்தகத்தின் நோக்கமென்று தெரிகிறது. இதன் முதற் பதிப்பு மிக்க விரைவிற் செலவாய்விட்டமையே பலரும் இதனை ஆதரிப்பதற்கு அறிகுறியாகின்றது. இதன் மற்றப்பாகங்களும் சமீபத்தில் வெளிவரும். இம் முதற்பாகத்தின் விலை அணா 8. விலாசம்:— மானேஜர், அகில இந்திய லா ஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர். (M. S. M. Ry.)

1932ஆம் டிசம்பர்மீ 16உ (ஆங்கீரஸஆம் மார்கழிமீ 2உ) காலை 9-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

:(o):

1. மகா-ள-ள-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B.L., அக்கிராஸனம்வகித்தவர்.
2. „ V. S. இராமஸ்வாமிசாஸ்திரி அவர்கள் B.A., B.L.
3. „ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள் B.A., B.L.
4. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1932ஆம் அக்டோபர் நவம்பர் மாதங்களின் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. சங்கவருஷோத்ஸவத்தில் படிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைப்பத்திரம் அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கம் தனித்தமிழ்ப்பரீக்ஷைசம்பந்தமாக விண்ணப்பித்த இருவருள் ஒருவர்க்குமட்டும் 19–12–32 காலையில் செய்யுளியற்றலில் ஸ்பெஷல் பரீக்ஷை நடத்தலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. பணம் வரப்பற்றமுடியாத ஆறு உண்டியல்களின் தொகை ரூ. 345-யும் வஜாசெய்துவிடவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
16—12—1932.

S. S. பாரதி,
அக்கிராஸனம்வகித்தவர்.

1932-ம் வருஷம் டிசம்பர்மீ 20உ (ஆங்கீரஸ வருஷம் மார்கழிமீ 6உ) செவ்வாய்க்கிழமை மதுரை ஸேதுபதிஹைஸ்கூலிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்க மகாஸபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷயவிவரக் குறிப்பு.

1. மகா-௱-௱-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள்
2. „ M. V. இராமாநுஜாசாரியரவர்கள்
3. ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்கள்
4. „ N. R. கிருஷ்ணஸாமிஐயங்கார் அவர்கள், B.A., B.L.
5. „ S. சோமசுந்தரபாரதி அவர்கள், M.A , B.L.
6. „ செய்யிது முகம்மது ஆலிம் புலவரவர்கள்
7. „ ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
8. „ பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள்
9. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A , B L., M.L C.
10. „ குமாரசாமிமுதலியாரவர்கள்
11. „ E. M. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்கள்
12. „ திரு. நாராயணையங்காரவர்கள்
13. „ N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள், M.A.
14. „ E. S. வரதராஜையர் அவர்கள்
15. „ பண்டித, நா. கனகராஜையர் அவர்கள்
16. „ V. S. ராமஸ்வாமிசாஸ்திரி அவர்கள், B A. B L.
17. „ வ. மு. இரத்நேசுவரையர் அவர்கள்
18. „ பண்டித. V. S. இராஜ ஐயனார் அவர்கள்
19. „ திரு. வீ. சாமிஐயங்கார் அவர்கள்
20. „ நவநீதகிருஷ்ணபாரதி அவர்கள்
21. „ மஹாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள்
22. „ P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள்
23. „ ராவ்பகதூர் P. C. முத்துசெட்டியாரவர்கள் M.L.C.
24. „ பண்டித, அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்

இவர்கள் வந்திருந்தார்கள்.

மகா-௱-௱-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபைத்தலைமை வகித்தார்கள்.

தீர்மானங்கள்.

1. மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி M.A., B.L., அவர்களை இச்சங்கத்தின் பிரதிநிதியாக அண்ணாமலை யூநிவர்ஸிடி ஸெனேட்டுக்குத் தெரிந்தெடுக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-௱-௱-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்.

ஆமோதகர்: மகா-௱-௱-ஸ்ரீ பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

2. மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் B.A., B.L , M.L.C., அவர்கள், இச்சங்கத்தின் உப-அக்கிராஸனாதிபதியாக இருக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி, M.A., B.L., அவர்கள்.

ஆமோதகர்: மகா-௱-௱-ஸ்ரீ பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

3. மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி, M.A , B.L., அவர்களும், மகா-௱-௱-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார், B.A., B.L., அவர்களும் இச்சங்கத்தின் கௌரவ காரியதரிசிகளாக இருக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-௱-௱-ஸ்ரீ பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

ஆமோதகர்: மகா-௱-௱-ஸ்ரீ N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயர், M.A., அவர்கள்

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

4. இந்தச் சங்கத்தின் முந்திய நிர்வாகஸபையின் மற்ற அங்கத்தினர்களே மறுபடியும் அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பெறுகிறார்கள்.

பிரேரேபகர்: மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி, M.A., B.L., அவர்கள்.

ஆமோதகர்: மகா-௱-௱-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B A , B.L., அவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

5. இந்தச் சங்கத்தின் வித்யாவிஷய ஆலோசனைஸபைக்கு முன்னிருந்த அங்கத்தினர்களுடன் மகா-௱-௱-ஸ்ரீ ஆ. கார்மேகக்கோனார் அவர்களையும்,

ஸ்ரீமத். சுவாமி விபுலாநந்தரவர்களையும் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கலாயிற்று.

பிரேரேபகர் : மகா-௱-௱-ஸ்ரீ N. R. கிருஷ்ணசுவாமி ஐயங்கார், B.A., B.L., அவர்கள்.

ஆமோதகர் : மகா-௱-௱-ஸ்ரீ S சோமசுந்தரபாரதி, M.A., B.L., அவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

6. சென்ற ஆண்டுகளில் இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்த ஸ்ரீமத். ராஜா. M. தினகர பகதூர் அவர்களுக்கும், கௌரவ காரியதரிசியாயிருந்தவர்களுக்கும் இச்சங்கத்தாரின் நன்றியறிதல் கூறலாயிற்று.

பிரேரேபகர் : மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி, M.A., B.L., அவர்கள்.

ஆமோதகர் : மகா-௱-௱-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

7. ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுலதிலகர்களாகிய மாட்சிமை தங்கிய ஸ்ரீஷண்முகராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள் இச்சங்கத்தின் அக்கிராஸனாதிபதியாக இருக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

பிரேரேபகர் : மகா-௱-௱-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள்.

ஆமோதகர்கள் : ஸ்ரீமான். வித்வான். திரு. வீ. சாமிஐயங்கார் அவர்கள், எட்டையபுரம்.

மகா-௱-௱-ஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதி அவர்கள், யாழ்ப்பாணம்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை,
20—12—1932.

வே. சாமிநாதையர்,
ஸபைத்தலைவர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1932-ம் வருஷ அக்டோபர் மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1932 அக்டோபர்	வரவு 1931 அக்டோபர்	விவரம்	செலவு 1932 அக்டோபர்	செலவு 1931 அக்டோபர்
I General Section:			I General Section:		
(1) சந்தொகைவகையில் வரவு...	39 2 ...		(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	100	
(2) மாதச்சந்தா வகையில் வரவு ...	50		(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	
(3) பாண்டியன் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	625		(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணை முதலியவற்றுக்காகச் செல்லாக்கியது. ...	175 12 8	
(4) சங்கப்பிரசுரங்கள் சம்பந்தமாகக் கிடைத்த தொகை வரவு	1		(4) Stationery contingencies வகையிற்செலவு ...	3 12 6	
(5) சங்கக்கலாசாலைக்கு மாத வாடகை வரவு ...	28		(5) பாண்டியன்புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ...	7 2 ...	
(6) Miscellaneous வரவு ...	2 8 ...				
மொத்தம் ரூ ...	745 10 ...	713			

II Editorial Section:						
(1) செந்தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ...	17	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	103	2	6			
(3) செந்தமிழ்ப் பழைய பிரதிகள் விற்றவகையில் வரவு...	1	11	...			
மொத்தம் ரூ ...	121	13	6	130	3	...

(6) சங்கக்கட்டிட மராமத்து வகையிற் செலவு ...	19	8	6			
(7) தபால், தந்தி வகையிற்செலவு	1	12	...			
(8) சங்கமாசிக சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு...	6	...	...			
(9) சரஸ்வதிபூஜை சமபந்தமாகச் செலவு ...	12	15	9			
(10) Miscellaneous செலவு ...	2	...	...			
மொத்தம் ரூ ...	453	15	5	377	14	6
II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டிஞ்ஜன்ஸி வகையிற் செலவு. ...	1	6	...			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு. ...	56	...	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	17	...	...			
மொத்தம் ரூ ...	109	6	...	118	13	8

III Press Section:						
(1) அச்சுக்கூலி வகையில் வரவு ...	78	...	...			
(2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்கு நிரையம் வரவு ...	2	8	...			
(3) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	20	...	...			
மொத்தம் ரூ ...	100	8	...	181	2	...

III Press Section:						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	106	4	9			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	22	8	3			
(3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது	29	4	3			
(4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு	8	3	10			
(5) மெஷின் வகையரா ரிப்பேர் வகையிற் செலவு ...	9	...	...			
மொத்தம் ரூ ...	175	5	1	167	5	7

வரவு விபரம்	1932 ரூ.	அ.	பை.	1931 ரூ.	அ.	பை.	செலவு விபரம்	1932 ரூ.	அ.	பை.	1931 ரூ.	அ.	பை.
							ஆக மொத்தம் செலவு ரூ ...	740	10	6	664	1	9
							மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	*16517	2	8	16162	7	1
ஆக மொத்தம் வரவு ரூ ...	967	15	6	1024	5	...							
மாத ஆரம்பத்திலிருந்த கைஇருப்புத்தொகை ரூ ...	16289	13	8	15802	3	10	ஆகமொத்தம் ரூ ...	17257	13	2	16826	8	10
ஆகமொத்தம் ரூ ...	17257	13	2	16826	8	10							

*By M. U. C. B.
Pass Book Rs. 5000- 0- 0

M. R. C. C. Bank
Pass Book Rs. 11094- 2- 2

Cash on hand Rs. 423- 0- 6

16517- 2- 8

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
15—12—32.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
5—11—1932.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து
1932-ம் வருடம் நவம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விபரம்	வரவு 1932 நவம்பர் ரூ.	அ.	பை.	வரவு 1931 நவம்பர் ரூ.	அ.	பை.	விபரம்	செலவு 1932 நவம்பர் ரூ.	அ.	பை.	செலவு 1931 நவம்பர் ரூ.	அ.	பை.
I GENERAL SECTION :							I GENERAL SECTION :						
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	70	...	...				(1) சங்கம் மானேஜ்மென்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	118	11	4			
(2) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக் கட்டணத்தொகைவரவு	1	...	...				(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	...	...			
(3) Miscellaneous வரவு ...	...	11	...				(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	128	11	4			
							(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	8	5	...			
							(5) தபால், தந்திவகையிற்செலவு	1	...	...			
மொத்தம் ரூ ...	71	11	...	117	2	6	(6) சங்கமாபிசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு.	59	...	...			

II Editorial Section :						
(1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைச் சந்தாவகையில் வரவு ...	16	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	55	14	...			
(3) செந்தமிழ்ப் பழையபிரதி விற்றவகையில் வரவு. ...	...	8	...			
மொத்தம் ரூ ...	72	6	...	138	13	...

(7) சங்க வருஷோத்ஸவ சம்பந்தமாகச் செலவு ...	7	...	...			
மொத்தம் ரூ	449	11	8	432	10	2
II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	5	13	9			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	110	...	...			
(4) தபால் தந்திவகையிற் செலவு	3	...	...			
மொத்தம் ரூ ...	153	13	9	172	6	6

III Press Section:						
(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	142	8	...			
(2) ஷை அச்சுவேலைக்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரயம் வரவு ...	2	12	...			
(3) பைண்டிங் கூலிவகையில் வரவு ...	61	...	...			
மொத்தம் ரூ ...	206	4	...	158	13	...

III Press Section :						
(1) அச்சாபீஸ் ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	110	...	4			
(2) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு.	17	13	10			
(3) பைண்டிங் ஆபீஸ் ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ..	33	5	8			
(4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	12	15	...			
மொத்தம் ரூ. ...	174	2	10	157	8	3

ஆகமொத்தம் வரவு ரூ. ...	350	5	...	414	12	6	ஆகமொத்தம் செலவு ரூ.	777	12	3	762	9	6
... மீதியிருப்புத் தொகை ரூ. ...	16517	2	8	16162	7	1	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ரூ. ...	*16089	11	5	15814	10	1
ஆகமொத்தம் ரூ. ...	16867	7	8	16577	3	7	ஆகமொத்தம் ரூ. ...	16867	7	8	16577	3	7

*By M. U. C. B.
Pass Bk. Rs. 5000- 0- 0
M.R.C.C. Bank
Pass Bk. Rs. 10694- 2- 2
Cash on hand Rs. 395- 9- 3
16089-11- 5

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
15—12—1932.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
5—12—1932.

38. மாலை யிராவணப் பாகன் பணிவா னசைநம்பர்
வேலை யிராவணற் செற்றோற் கிறைவர் வெற்பில்வெய்ய
பாலை யிராவணப் பைங்கோதை சென்றனள் பார்க்கினங்கோர்
சோலை யிராவணற் கெவ்வா று பின்பு தொடர்ந்தனளே.

(கு-உரை.) மால் - பெருமையையுடைய. அயிராவணப்பாகன் - இந்திரன்; அயிராவணம்-ஐராவதம்; "உயர்வரை யிராவண வாகனத் தோன்முத னம்பர்" (திருமயிலைத்திரிபந்தாதி, ௨௦.) வேலை இராவணன் - கடல்சூழ்ந்த இலங்கையிலுள்ள இராவணனை; வேலை: ஆகுபெயர். செற்றோன் - இராமன். பாலை - பாலைநிலத்தில். இரா வண்ணப் பைங்கோதை - இராத்திரியின் நிறத்தையுடைய கூந்தலையுடையாள். இரா - இராது. அண்ணற்கு - தலைவனுக்கு.

நம்பர், இறையவர் இவரது வெற்பிற் பாலைநிலத்திற் கோதை சென்றனள்; அங்கே சோலை இராது; எவ்வாறு தொடர்ந்தனள்.

இது செவிலிகூற்று.

39. தொடரும் பலபிணி தீரநெஞ் சேயொன்று சொல்குவன்கேள்
இடரும் பலபய மென்றுமுன் காத்தவ னேத்தும்பின்மேற்
படரும் பலவு புடைசூழுங் கூழை பரவுபிறை
அடரும் பலனுக் கியமனம் மேல்வர வஞ்சுவனே.

(கு-உரை.) இடர் உம்பல் - முதலையினால் துன்பத்தை அடைந்த கஜேந்திரன். காத்தவன் - திருமால். படரும் - செல்லும். பலவு - பலாமரங்கள். வந்தும் கூழையென்க. பிறை அடரும் - பிறையை வென்ற. பல் அருகி. யமன் எம்மேல் வர அஞ்சுவன்.

நெஞ்சே! கேள்; கூழையாய் பலவு; [illegible] யமன் எம்மேல் வர அஞ்சுவன்

40. அஞ்ச மனைய வுமையாள்பின் னேகி னசலமுந்நீர்
கஞ்ச மனையவள் பின்னேகி னேகு கலங்குவதென்
நெஞ்ச மனையயன் மால்பணி கூழை நிமலர்வெற்பில்
வெஞ்ச மனையடர் கண்ணளு மவ்வண்ண மேவுவளே.

(கு-உரை.) அஞ்சம் - அன்னப்பறவையை. அசலம் - இமயமலை. அசலம் உமையாள்பின்னே ஏகின். முந்நீர் - பாற்கடல். கஞ்சம் மனையவள் - தாமரையை இருப்பிடமாக உடைய திருமகள். முந்நீர் திருமகளின்பின் ஏகின். ஏகு - நீயும் தலைமகளின்பின்னே செல்வாயாக. அனை - அன்னையே. அன்னையே! நெஞ்சம் கலங்குவது என்? சமனை அடர்க்கும் கண்ணையுடையவளும்.

சிவபெருமானை மணந்துசென்ற உமாதேவியின்பின் இமயமலையும், திருமாலை மணந்துசென்ற திருமகளின்பின் பாற்கடலும் சென்றிருக்குமாயின் நீயும் தலைவியைத்தேடிப் பின்செல்லுதலும் இரங்குதலும் பொருந்துமென்றபடி. மணந்த மகளிர் கணவன்பின் செல்லுதல் உலகஇயல்பு; ஆதலால் நீ வருந்தா தொழி என்பது கருத்து. "சங்க மலைக்குந் திருப்பாற் கடனேர்ந்து தான்பயந்த, செங்க மலைக்குமுன் பிற்சென்ற தோமின்னுஞ் செம்மலும்போய்ப், பங்க மலைக்கு வழங்குபிரான்புக லூர்பயில்வார், துங்கம லைக்குயி றொக்கும்" புகலூரந்தாதி, ௩௪.

இது தலைவனுடன் சென்ற தலைவியை நினைந்து இரங்கிய செவிலிக்கு மிக்கோர் ஏதுக்காட்டல்.

பி-ம். "முன்னீர்"

41. மேவிய கங்கை புனையும் பிரான்மலர் வேதியனூன்
பாவிய கங்கையி லேற்றிரந் தோன்மென் பணிலம்வராக்
கூவிய கங்கைய லாரஞ் சொரிதருங் கூழைசென்று
வாவிய கங்கை மடவார் கலவி மயக்கத்தையே.

(கு-உரை.) மலர்வேதியன் - பிரமனது. ஊன் பாவிய கம் - தசை நிறைந்த தலையில். பணிலம் - சங்குகள். வரா - வந்து. கூவிய - முழங்கினவாகி. கங்குஅயல் - வயல் வரம்பின் பக்கத்தில். ஆரம் - முத்தை. பணிலம் சொரிதரும். சென்று அவாவி. அகம் - மனமே. மயக்கத்தைக் கைக; கைக - வெறுப்பாயாக.

அகமே! பிரான், இரந்தோனது கூழைசென்று அவாவி, மயக்கத்தைக் கைக என இயைக்க.

42. மயங்கத் தராதல மங்கையர் கைப்பலி வாங்குமணிப்
புயங்கத் தராதவன் பல்லுகுத் தோர்வரைப் பூவைமுலை
முயங்கத் தராதர வுண்டுதென் கூழையின் முத்தமிழ்கொண்
டியங்கத் தராதவர் பானெஞ்ச மேயென்கொ லேற்பதுவே.

(கு-உரை.) தராதல மங்கையர் மயங்க, மணிப் புயங்கத்தர் - மணியை யுடைய பாம்பை அணிந்தவர்; புயங்கம் - பாம்பு. ஆதவன் பல் - சூரியன் பல்லை. வரைப்பூவை - உமாதேவியாரது. முயங்கு அத்தரது ஆதரவு தென்கூழையில் உண்டு. முத்தமிழ்கொண்டு - முத்தமிழ்ச்செய்யுட்களை இயற்றிக்கொண்டு. இயங்க - இயங்குதற்கு. ஏற்பது - இரப்பது.

நெஞ்சமே! கூழையில், புயங்கத்தர், உகுத்தோர், அத்தரது ஆதரவுண்டு; தராதவர்பால் முத்தமிழ்கொண்டு ஏற்பது என்கொல்?

43. ஏற்றின னாக வனத்தன்முன் போயிவ் விளம்பிறைவெண்
கீற்றின னாக வனத்தந் தருமென் கிறுவையொடு
சாற்றின னாக வனத்தநத் தாய்சம்ப ராரிவந்து
தோற்றின னாக வனத்தவ ளாருயிர் சோருமென்றே.

(கு-உரை.) நாகவனத்தன் - புன்னைவனத்தான். பிறையாகிய வெண் கீற்றனது. இனனாக அனத்தம் தரும் - சூரியனாகத்தோன்றித் துன்பத்தைத் தரும்; அனத்தம் - அனர்த்தம். என் - என்பாயாக. இன்னல் சாற்று - துன்பத்தைச்சொல். நாகவனத்த நத்தாய் - நாகப்பச்சையின் நிறத்தையுடைய கிளியே; வன்னம் - வர்ணம். சம்பராரி - மன்மதன். ஆ: ஐயோ. கவனத்தவள் - மிக்க கவலையையுடையவளது.

நத்தாய்! நாகவனத்தன்முன்போய்ப் பிறைக்கீற்று இனனாக அனத்தம் தருமென்பாயாக. பின்னும் சம்பராரி வந்து தோற்றினன்; அதனால் கவனத்தவள் உயிர்சோருமென்று இன்னலை அருளொடு சாற்றுவாயாக.

இது கிளிவிடுதூது.

44. சோர்வரு மந்த ரதியனை யாள்கொண்டு தோகையன்னீர்
தேர்வரு மந்த ரவிவரல் பார்க்குந்தென் கூழையிற்புள்
ளூர்வரு மந்தா காதனும் போற்ற வுருகியருள்
கூர்வரு மந்தரத் திண்புய மாலை கொடுத்திலரே.

(கு-உரை.) அருமந்த ரதியனையாள் சோர்வுகொண்டு, ரவிவருதலைப் பார்ப்பாள்; ரவி - சூரியன். புள் ஊர்வரும் - கருடப்பறவையையும் அன்னப் பறவையையும் ஊர்பவர்களாகிய திருமாலும் பிரமதேவனும். அருள்கூர்வரும் - அருள்கூர்பவராகிய சங்கரர்; உம்மை: அசைநிலை; உயர்வுசிறப்புமாம். மந்தர மலைபோன்ற திண்ணிய புயத்தில் அணிந்துள்ள மாலையை.

சூரியன்வருதலைப் பார்த்தல் இரவுநீடுபெருவரல் நீங்க; இரவுநீடுபெருவரலென்பது புறத்திணையிலுள்ள பெண்பாற்கைக்கிளையில் ஒருதுறை.

தோகையன்னீர்! ரதி அனையாள் சோர்வுகொண்டு ரவிவரலைப் பார்க்கும், கூழைநாதர் மாலைகொடுத்திலர்.

இது பாங்கிகூற்று.

45. கொடுங்கலி யானைநெஞ் சேபெறி வான்பவக் குன்றினைவே
ரொடுங்கலி யானை யுதைத்தோன்றென் கூழை யுகந்தபிரான்
கடுங்கலி யானை கரும்புணக் கண்டவன் காசினிசூழ்
நெடுங்கலி யானைய னத்திபங் காளனென் னித்தழுமே.

(கு-உரை.) கலித்துன்பத்தால் நைகின்ற நெஞ்சே; கலி - வறுமை. பவமாகிய குன்றினை வேரொடும் கல்லி எறிவான்; பவம் - பிறவி. ஆனை - இடபத்தை. மறுரையிற் கல்லாலாகிய யானை கரும்பை உண்ணச் செய்தவன். நெடுங்கலி ஆம் நயனத்தி - உமாதேவியார்; கலி - கடல். என் - என்பாயாக.

நெஞ்சே! நித்தமும் எறிவான், உதைத்தோன், பிரான், கண்டவன், பங்காளன் என்று சொல்வாயாக.

46. நித்தம் பயிலா தென்கூழை வாழு நிமலமத
மத்தம் பயில காவணிந் தோய்மத வேள்விடுத்த
கொத்தம் பயில வருமா விழைமைக் குவளைவிழி
தத்தம் பயில விதழியெவ் வாறு தரித்திடுமே.

(கு-உரை.) நித்தம்=நிருத்தம் - நடனம்; "நிருத்தம் பயின்றவன்" (திருச்சிற். கஉ.) மதமத்தம் - ஊமத்தைப்பூவையும்; "கன்னார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம், உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார்" (தே.) பய் இலகு அரவு; பய்=பை - படம்; "பயிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்" (திருவரங்கத்தந்தாதி, சக.) கொத்து அம்பு: எழுவாய். அம்பு ஆவியை அயில வரும். விழி தத்து அம்பை - கண்ணீரை. இலவு இதழி - இலவம்பூவைப் போன்ற இதழையுடைய தலைவி.

அணிந்தோய்! வேள்விடுத்த அம்பு ஆவியை அயில வரும்; விழி தத்து அம்பை இதழி எவ்வாறு தரிப்பாள்?

இது பாங்கிகூற்று.

47. இடுவந்தி யாயுரைக் கும்பனி நீரொன் றிறைப்பர்வெந்நீர்
கொடுவந்தி யாழ்மொழி நல்லார் பொருங்கொடி யோனையின் னும்
அடுவந்தி யாநின்ற பேர்க்கருள் கூழை யமலவசைக்
கடுவந்தி யார்பொறாப் பார்வெறுப் பாயிடுங் கைவந்தியே.

(கு-உரை.) யாய் இடுவந்தி உரைக்கும்; இடுவந்தி - குற்றமில்லாதவர்மேற் குற்றத்தை ஏற்றிச்சொல்லும் சொல்; 'பொற்கொல்லனது நெஞ்சம் இடுவந்தி கூறுதலைப் புரிந்துநோக்க' (சிலப். கசு: ககஎ-உ0, அடியார்.) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க. கொடுவந்து - கொண்டுவந்து. நல்லார் - தோழிமார். நல்லார் வெந்நீரைக் கொடுவந்து பனிநீரொன்று இறைப்பர். கொடியோனை - மன்மதனை. அடு - அடுவாயாக. வந்தியாநின்றபேர்க்கு - வணங்குபவர்க்கு. வசைக்கடு - பழிமொழியாகிய விஷத்தை. வந்து: உரைநடை; பரிமேலழகருரையிலும், துறைமங்கலம் சிவப்பிரகாசஸ்வாமிகள்வாக்கிலும் வழக்கிலும் இச்சொல் மிகவும் காணப்படும். கைவந்தி - தோளில் அணியப்படும் ஆபரணம்; "வணங்கிறைப் பணைத்தோள்..............வயக்குறு வந்திகை" (மதுரைக். சகச-ஞ) என்பதனையும் அதன் உரையையும் அடிக்குறிப்பையும் பார்க்க.

இது தலைவிகூற்று.

48. வந்திக் கமலங் கவிர்சடை மேல்வைவை மண்சுமந்தோர்
நந்திக் கமல மணிசொரி கூழையி னம்பர்மதத்
தந்திக் கமலங் கலையொழித் தோன்பணி சங்கரனென்
றுந்திக் கமல முதித்தோன் விதிப்ப தொழிநெஞ்சமே.

(நூ-உரை.) வந்திக்கு - செம்மனச்செல்வியென்னும் பிட்டுவாணிச்சிக்கு. அம் அலங்கு - ஆகாயகங்கைநீர் விளங்குகின்ற. நந்து இக்கு - சங்கமும் கரும்பும். அமலம் - குற்றமின்மை. மணி - முத்துக்களை. மதத்தந்தி - கசேந்திரன். கம் மலங்கலை - நீரில் மயங்குதலை. ஒழித்தோன் - திருமால். என்று - என்று துதித்து. உந்திக்கமலம் உதித்தோன் - பிரமன். விதிப்பது - இனிப் பிறப்பிப்பதை.

நெஞ்சமே! சுமந்தோர், நம்பர், சங்கரரென்றுசொல்லிப் பிறத்தலை ஒழிப்பாயாக.

பி-ம். "உதிப்போன் விதித்தது"

49. ஒழியா யிரங்கலை யோவிய மேயென் றுரைத்துதவீர்
விழியா யிரம்படைத் தோன்பணி கூழை விமலர்பைந்தார்
பழியா யிரண்டு மருப்போ தொருத்தனைப் பார்ப்பதென்மால்
வழியா யிரந்தக னீரன்றி வேறில்லை மங்கையரே.

(நூ-உரை.) இரங்கலை ஒழியாய். ஓவியமே - சித்திரம்போல்வாய். பைந் தாரை உதவீர். பழியாய் - குடிக்குப் பழி உண்டாகும்படி; ஆய் - ஆக. இரண்டு மருப்பு ஓது ஒரு தனை - இரண்டு மருப்புக்களையுடைய சொல்லப்படுகின்ற ஆட்டினை; ஒரு - ஆடு; "ஒருத்திக் கொருவன் பகையோ" (தனிப்பாடல்.) பார்ப்பது என் - வெட்டப் பார்ப்பதற்குக் காரணம் யாது. மால்வழி ஆயிர் - மயக்கம் தோன்றிய வழியை ஆராயாமலிருக்கின்றனிர். நீர் அந்தகன் அன்றி - இந்த ஆட்டுக்கு நீர் அந்தகனாக வுள்ளீரே யல்லாமல்; அந்தகன் - யமன். மங்கையரே யென்றது செவிலித்தாய் முதலிய ஐவரையும் நோக்கி.

மங்கையரே! தாரை உதவீர்; ஒருத்தனைப் பார்ப்பது என்? ஆயிர்; நீர் அந்தகன் அன்றி வேறில்லை.

இது பாங்கி வெறிவிலக்கியது.

50. மங்கைக்கு வாம மளித்தருள் கூழை வரதவிளங்
கொங்கைக்கு வாமதி யொன்றோ பகையொரு கோடிகெட்டேன்
சங்கைக் குவாமங்கை பெற்றா ளவள்பெற்ற தானையிவள்
அங்கைக்கு வாம மணற்சிறு கூட லளித்ததுவே.

(நூ-உரை.) மங்கைக்கு-உமாதேவியாருக்கு. வாமம்-இடப்பாகத்தை. இளங் கொங்கைக்கு - தலைவிக்கு. உவாமதி ஒன்றோ பகை - கலைநிரம்பிய சந்திரன் ஒன்றுமட்டுமோ பகை? கெட்டேன் - ஐயோ. சங்கை - இவள் வளையல்களை. கு ஆம் மங்கை - பூமியாகிய மடந்தையானவள். வளையல்கள் நழுவிப் பூமியில் விழுந்துவிட்டன என்றபடி. அவள்பெற்ற தானை யென்றது கடலினை; தானை - ஆடை. இவள் அங்கைக்கு - தலைவியினது கைகளுக்கு. வாமம் - அழகு. மணற்சிறுகூடல் - மணலில் எழுதப்படும் சிறிய கூடற்சுழியினை. பூமியாகிய பெண்ணுக்கு இவள் வளையல்களை அளித்தாள்; அவள் ஆடையாகிய கடல் இவள் கூடற்சுழி எழுதுவதற்கு மணலை அளித்தது; இது பரிவருத்தனையணி.

வரத! தலைவிக்கு மதி ஒன்றுதானா பகை? வேறு கோடி பகைகள் உள்ளன. உம்முடைய விரகத்தால் இவள் கைவளையை இழந்தாள். கடற்கரையிலிருந்து மணலிற் கூடற்சுழியைச் சுழிக்கின்றாள்; இரங்கியருளவேண்டும்.

இது பாங்கிகூற்று.

பி-ம். "அளித்தவர் கூழை" "ஒரு கோடியன்றோ"

51. அளித்தடங் காவி யலர்விழி யாவுடை யம்மைபங்கர்
நளித்தடங் காவியல் சார்கூழைச் சங்கரர் நாட்டெழுகார்
களித்தடங் காவிய மன்கா ணதைக்கடுந் தேர்விடுத்தே
தளித்தடங் காவி யருள்வல வாவொரு தையலுக்கே.

(நூ-உரை.) அளியையும் காவியலரையும்போன்ற விழியையுடைய. நளித் தடம் கா - குளிர்ச்சியையுடைய தடமும் காவும். நாட்டு - நாட்டில். கார் - மேக மானது. களித்து அடங்கா இயமன் கான். அதை - அம்மேகத்தை. தள்ளித் தடு; தள்ளி: தொகுத்தல்விகாரம். வலவா - தேர்ப்பாகனே. தையலுக்கு அங்கு ஆவி அருள்.

வலவா! நாட்டில், கார் இயமன்கான்; அதைத் தடு; தையலுக்கு ஆவியை அருள். நீ விரைந்துசெல் என்பது கருத்து.

இது மீண்டுவரும் தலைவன் பாகனுக்குக் கூறல்.

பி-ம். "காவியல் சூழ்கூழை"

52. தைய லருந்தளிர் மேற்சரு காயில டன்றுயிரை
மைய லருந்த லறுவதெந் நாண்மதி போலொளிரச்
செய்ய லருந்தண் கமலமுத் தீனுந்தெங் கூழைப்பிரான்
கைய லருந்த வருமுனம் வேடனைக் காய்ந்தவனே.

(கு-உரை.) தையல் அருந்தளிர்மேல் சருகு ஆய் - தலைவி தளிர்ப்பாய லின்மீது காமவெப்பத்தால் சருகுபோல்கின்றாள். இவள் உயிரை, மையல் - மயக்கம். ஒளிர - ஒளிரும்படி. செய்யில் அலரும் கமலமானது முத்தை ஈனு கின்ற, ஒளிர முத்தீனும். பிரான் : விளி. கையிலுள்ள அலர்களை உந்துதற்கு வேள்வரு முன்னமே; வேள் - மன்மதன்; வேள்தன்னை.

கூழைப்பிரானே! காய்ந்தவனே! இவளுயிரை மையல் அருந்துதல் நீங்கு வது எக்காலம்? அருளவேண்டு மென்றபடி.

இது பாங்கிகூற்று.

பி-ம். "மைய லருந்த வருவதென்னும்"

53, காயந் தகன மூறுமுன மாவிளைக் கொள்ளநம்மை
ஆயந் தகனமர் செய்யாமுன் கூழை யரனைமதம்
போயந் தகனவ னென்னவெய் யோன்கண் பொறுத்தவனை
நேயந் தகனளி னத்தாள் பணிய நினைநெஞ்சமே.

(கு-உரை.) காயம் - உடம்பு. தகனம் உறுமுனம். ஆய் - ஆய்கின்ற. அந்தகன் அமர் செய்யாமுன்; அந்தகன் - யமன். மதம்போய் - செருக்குக் கெட்டு. அந்தகன் என்ன - குருடனென்றுசொல்லும்படி. வெய்யோன் கண் - சூரிய னுடைய கண்ணை. பொறுத்தவனை - துளைத்தவனை. நேயம் தக - அன்பு பொருந்த.

நெஞ்சமே! காயம் தகனம் உறு முன்னம், அந்தகன் அமர்செய்யாமுன்னம் அரனது தாளைப் பணிய நினை.

பி-ம். "அமர் செல்லாமுன்"

54. நினைவா ரிதய நிறைந்திருப் பார்புன்னை நீழலுற்றோர்
கனைவாரி தன்னில் விடம்வாரி யுண்டருள் கண்டர்வெற்பில்
எனைவா ரிதமுற வேயுரைப் பார்பச் சிலம்பிவிகாசர்
நினைவா ரிதனிற் சிலகா லிருந்த திருந்திழைக்கே.

735. வான்வழங்கு நீர் - ஆகாயகங்கை.

736. சேர்த்த துகள் - மணப்பொடி; திருநீறுமாம்.

737. பிறக்குதல் - மிகுவித்தல். பிறபெயர் - வேனைவீரர்கள். வீழ்ந்தோரைப் பிறவீரர் சூழ்ந்த கல்லின்மேற் செய்தமைத்தார் என்க.

741. அடைவிரவிப் பொருள்வேறுபடவரும் ஒட்டணிவகை. முகில் - மேகம், வள்ளல். இன்சொல் - இன்மொழி, புகழ்.

742. அடையை விபரீதப்படுத்திப் பொருள் வேறுபடவந்த ஒட்டணி வகை. இது, வறுமையுற்றானுகிய வள்ளலொருவனைச் சொல்லாநின்றது. சேர் வோர்க்கு அருமையும் இனிமையின்மையும் கருமையும் கடற்குண்மை காண்க.

746. இராமனது கட்கடை சிவக்குமாயின் அரக்கன்வலி புண்டோ என்க. கண்சிவத்தற்கு - வெகுளுமிடத்து.

749. பரசிராமனிடமிருந்து உலகைத் தானம்பெற்ற காசிபன் தானீன்ற உலகைத் தானே காத்தளிக்க விரும்பி, பிறர்க்கு உதவசெய்யாது தானே பெற்றத் தன்மகளை வாங்கிய தாயினை ஒத்தான்; அதனால், கொடை வென்றியை அப்பரசிராமன் உலகிற்கு விளக்கினன் என்பது கருத்து.

752. இந்திரன் தன்மைந்தனை விசயனது உயிர்காத்தலை விரும்பி இரவி மைந்தனை கன்னனை வெல்லுதற்கேற்ற வரம் பெற்றான்; அதனால் கொடுத்த இரவிமைந்தனேயன்றிப் பெற்ற இந்திரனும் பெருமைபெறலாயினன் என்க.

754. செயிர்த்தார் மறவந்தார் - பகைவர் மலங்கலங்கியோர்.

755. கலிவரல் ஊழி - கலியுகம்.

757. "இப்பாரதத்துள் ஒருவன் இன்னது செய்வல் என்று அது செய்ய முடியாமையின் அவிப்பலி கொடுத்தவாறு காண்க" என்பர் நச்சினார்க்கினியர். புறவோர் இல் பாணிப்ப - அயலார்வீட்டில் தாமதிக்க.

759. பிறக்கிடம் - பின்வாக்குகை. மானவேந்தன் - விசயன். ஒல்லான் - ஒல்லானுக.

760. பாகன் - கண்ணபிரான். நிற்றந்து - நின்று. [illegible] யோன் - விசயன்.

761. (2 - 3) 'செயத்தம்' எனவும் 'தாராசங்கிரோமி' ([illegible] பா. நாற்று.) எனவும் கூறுப. உடம்பெயிற்று [illegible] அந்தோபகர்தர். (12) கடா - இவிழிக்க.

763. கற்பினுளே மால் (கண்ணபிரான்) வணங்கும் என முடியும். கார் காத்தல் - மழையைத் தடுத்தல்.

764. அகவை - வயது. பதினாறுபேறுகளும் இதனுட் காண்க.

765. வச்சத்தார் மன்னவன் - வச்சநாட்டரசன் மடபினனுப்த் தமிழ் நாட்டுப்பகுதியாண்ட வேந்தன்; இன்றோர் வத்ஸராஜன் எனச் சாஸனங்களிற் கூறப்படுவர்.

768. சொல் திகவா இல் - கணவன் சொற்கடவாத கற்புடைய இல்லாள். தீர்நாடு - புனலுடைய சோழதேசம்.

769. தொல். புறத்திணை. 5, இளம்பூரண. மேற்கோள்.

770. இஃது முந்தோன்னாயிரச் செய்யுள் என்பர் இளம்பூரணவடிகள் (தொல். புறத்திணை. 5)

771. வஞ்சியேன் - கருவூரில் உள்ளவன்.

772. பறை நல்ல படா - நல்ல பறைகள் ஒலியா; செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவதென்பதாம் (குறள். 1115, பரி.)

773. கரைபெறு - இரவாகிய கடற்குக் கரையாக. காலையும் கண்பரிய, கவ்வையும் கடல்போலும், ஆவி ஆற்றுது மேகலையோட ஓடும் என்க.

775. சக்கரம் - உலகவட்டம். அரசுக்குரிய இளையோன் தங்கியவீட்டில் பகைவர் தீக்கொளுவியபோது, அதனினின்று தப்புமுயன்றவழி, ஒருபாதம் தீப்பட்டுக் கருகினமையால், அவ்விளைஞன் கரிகாற்சோழன் எனப்பட்டான் என்பது வரலாறு.

777. கச்சியிலுள்ள வளைக்கையை உடையவளாகிய உமாதேவியின் காமக் கோட்டம் என்க. மாசாத்தன் உதவிய செண்டு(ஓர் ஆயுதம்)கொண்டு கரிகாலன் இமயமால்வரை திரித்தான் என்பது கதை.

778. இற்றைக்கு 1940-ஆண்டுகட்குமுன் கரிகாலன் காவிரிக்கரை கட்டியவன் என்பது இதனுற் பெறப்படும். "தொக்க சகனிற் றுளாயிரத்துத் தொண்ணூற்றில்" என்ற பாடற்படி இற்றைக்கு 1068-வருஷங்கட்குமுன் காவிரிக்கரை கட்டப்பட்டதென்பதாம். பின்னர்க்கண்ட பாடமுறையில் 9-ம் நூற்றாண்டில் ஆண்ட கரிகாலன் என்ற வேறொருவனே காவிரிக்கரை கட்டியவனாதல்வேண்டும்.

779. கஞ்சி காவேரிக்கரை கண்டு - கச்சியையும் காவிரிக்கரையையும் செப்பனிட்டுத் திருத்தியும்.

780. மெய்க்கீர்த்தி என்பது, "சொற்சீரடியால் எழிலரசர் செய்தி விசைத்த" லாகும் (வச்சணந்தி. செய். 34). இராசராசசோழன் ஆட்சிவருஷம் 985 - 1013. ஆகும். காந்தளூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்துப் பக்கத்தது என்பர். வேங்கைநாடு - கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசம். கங்கபாடி - காவிரிக்கரையிலுள்ள தலைக்காட்டைத் தலைநகராக உடையதும், மைசூர் இராஜ்யத்தின் தென்கீழ்பாலுள்ளதுமாகிய பகுதியாகும். நுளம்பபாடி - கங்கபாடியையடுத்ததும், மைசூர்க்கு வடக்கணுள்ளதும், நுளம்பர் என்ற பல்லவர் கிளையினரால் ஆளப்பட்டுவந்ததுமான நாடு. இரட்டபாடி - இராஷ்டிரகூடர் என்ற வேந்தராண்ட தக்கணதேசம் (Deccan). எழுசைபிலக்கம் பன்னீராயிரம் என்பன அவ்வந்நாட்டின் வருவாய்த் தொகைகுறிக்கும் என்பர் (Mysore and Coorg from the Inscriptions, 174). தடிகைவழி - பங்களூர்ஜில்லாவுக்கு மேலைப்பிரதேசம் என்பர். பழந்தீவு - லக்ஷத்தீவு (Laccadives), மாலைத்தீவு (Maldives) எனப்படுந் தீவங்கள்.

782. இம்மெய்க்கீர்த்தியிற் கண்ட நாடு நகரங்களைப்பற்றி "எபிக்ராபிகா - இண்டிகா" (Epigraphica Indica) 9-ம் தொகுதி 230—1-ம் பக்கங்களில், டாக்டர் - ஹூல்ஷ் துரையவர்கள் எழுதிய குறிப்புக்களால் அறியத்தகும். இடைதுறைநாடு என்பது கிருஷ்ணாநதிக்குத் தெற்கினும் துங்கபத்திரைக்கு வடக்கினுமுள்ள ரெய்ச்சூர்ஜில்லா முழுதுமடங்கின பிரதேசம் என்றும், மண்ணைக்கடக்கம் என்பது மான்ய கேடம் என்றும், சக்கரக்கோட்டம் என்பது, பாஸ்டர் ராஜ்யத்து (Baster State) ராஜபுரத்தை அடுத்துள்ளதென்றும் கூறுவர் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் S. I. I. iii p. 466). முதல் இராஜேந்திரனது வரலாறுகளையும் வெற்றித்திறங்களையும் சோழவம்சசரித்திரம் 17-19-ம் பக்கங்களிற் கண்டுகொள்க.

783. இவன் 1018-ல் இளவரசுப்பட்டம் பெற்றவன். இவன் வரலாறு சோழவம்ச சரித்திரம் 19—21-ம் பக்கங்களிற் காண்க.

784. இம் மெய்க்கீர்த்திகொண்ட சோழன்வரலாற்றைச் சோழவம்ச சரித்திரம் 21—23-ஆம் பக்கங்களிற் காண்க. வீரராசேந்திரதேவன் என வரும் இடங்களை இராசேந்திரதேவன் எனத் திருத்திக்கொள்க.

785. இவன் மேற்கூறிய இராசேந்திரதேவன்மகன் (சோழவம். பக். 23).

786. பரகேசரி இராசேந்திரதேவனுடைய மூன்றாம் மகன். இவனுக்கு வீரசோழன் என்பதும் பெயர். வீரசோழியம் இவன் பெயரால் அமைந்தது. இவன் பெருமைகளைச் சோழவம்ச சரித்திரம் 25—26-ம் பக்கங்களிற் காண்க.

787. இவன் வீரராசேந்திரனுக்குப்பின் பட்டந்தரித்து, அவன் மருமகன் முதலாம் குலோத்துங்கனாற் கொல்லப்பட்டவன் என்றும் ,வீரராஜேந்திரனுக்கு மகன்முறையினன் என்றும் கூறுவர் (சோழவமி, பக். 26).

788. கூடலசங்கமம் கிருஷ்ணாநதி பஞ்சகங்காநதிகள் கூடும் இடம். கூடற்சங்கமம் என்றும் கூறுவர்; 'குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற கோனபயன்' என்பது கலிங்கத்துப்பரணி (193). புன் கூடல சங்கமம் - இழிவான சேர்க்கையுடைய கூட்டம்.

789. வடுகர் - கருநடர்; கண்கூடப்பண்ணுதல் - இடத்தையடையச் செய்தல்; உறங்கச்செய்தலுமாம். கானில் விண் கண்கூட இடம் பண்ணினான் என்க.

790. சோழன் பகைவராய் வாழவேண்டின், அவனுடன் பொருது வீரசுவர்க்கமடைதல், அன்றித் துறந்து வீடடைதல் ஆகிய இரண்டனுள் ஒன்று செய்யத்தக்கது என்பதாம்.

791. தற்று உற்று - இறுக ஆடையுடுத்துக்கொண்டு. வன்பாரதம் - வலிய பரப்பினையுடைய தேர். வலிய பாரதப்போர் போலப் போர்புரி எனினுமாம். வெற்பு - யானை. கொப்பம் - கிருஷ்ணாநதியாகிய பேராற்றங் கரைக்கணுள்ள ஊர்.

793. குடை நிலைபெற்றது, கோல் செம்மையொடுசென்றது; சேறல் - நிகழ்தல்; கோ - அரசியன்முறை. 'ஐவர் வந்து கோச்செய்து குமைக்க' (தேவா. 997,6) என்புழிப்போல. ஞாலம் கலியைக் கடந்தது என்க.

794. பகைதீர்தற்கு இடனாகிய சடை. கோரம் - சோழன்குதிரை, வான் - மேகம்.

798—801. முதற்குலோத்துங்கன் வரலாற்றினைச் சோழவமிசசரித்திரம் 26—31-ஆம் பக்கங்களிற் காண்க. தாராவரசன் -மத்தியமாகாணத்துள்ள சக்கரக்கோட்டமண்டலத்து வத்ஸராஜ்யத்தையாண்ட தாராவர்ஷன் (Ep In. ix, p. 178).

799 வேள்குலத்தரசர் - சளுக்கிய வேந்தர். பஞ்சவர் ஐவர் - ஐவர் பாண்டியர்; மார்க்கோபோலோ என்ற பிறதேசயாத்திரிகரும் ஐவர்பாண்டியர் தங்காலத் தாண்டனராகக் கூறுதல் ஒப்பிடத்தக்கது. சாவேறு - பகையரசனைச் சூழ்ந்துதாக்கும் படைமீது ஒருமுகமாகப்பாய்ந்து ஊடறுத்துச்சென்றும், அம் முயற்சி கைகூடாவிடத்து உயிர்துறத்தலைப் பொருட்படுத்தாமலும் தாக்கும் பெருவீரர்குழு. மலைநாட்டார் இப்படைவீரரை இவ்வாறே இன்றும் வழங்குவர். "சாவேற்றின் திண்செருக்கை யன்றமைத்தான்" (1110) என அபயன்

சேனாபதியருள் ஒருவனான மணவிற்கூத்தன் புகழப்படுதலும் காண்க. எங்கராயன் கலிங்கசேனாபதியென்பது, "என்று கூறவே எங்க ராயனே, னென்று கூறகே னென்று ரைக்குமால்" என்ற கலிங்கத்துப்பரணித் தாழிசையாலும் அறிக.

802. சயதரன் - முதற்குலோத்துங்கன். குந்தவை - அச்சோழன் சகோதரி. (சோழவமிச. 29)

803. அருவர் - தமிழர். 'அருவரருவரொனவிறைஞ்சினர்' என்றார் சயங்கொண்டாரும் (கலிங். 438). நீத்நீத்நீ=ஒதுங்கு ஒதுங்கு ஒதுங்கு என்னும் பொருளில்வரும் அடுக்கு; தெலுங்குத்தொடர்.

804. குணத்திலே குறைவுகூறிக் காரியத்திலே மேம்பாடுதோன்றச் சொன்னமையாற் குணக்குறைவிசேடம் என்பர்.

805. அதுலன் - ஒப்பற்றவனான சோழன். அதுலன் கலிங்கத்துக் கவர்ந்த வளம் யானைத்திரள் என்பதாம்.

807. தலைமையரசனது ஆட்சியாண்டைக் குறிக்க, அவ்வாண்டின் எண்ணளவாக மணிகளை மாலையிற்கோத்துச் சிற்றரசரணிதல் வழக்குப்போலும்.

809. மலை, கடல், அரவின்தலைகளிற் பயின்ற தவமுடையார் முறையே கொற்றவை, திருமகள், பூமிதேவி என்க. மலை - விந்தம்.

810. விழையார் - பகைவர்; அவர் விழைதல் ஆர்ந்த மெல்லிய ஆடை தளிரார்ந்த குழையாம் என்க. உழை - மானினம். உறை - உறையுள். முழை - குகை.

811—12. 1118-ல் பட்டம்பெற்றவன். இவன் வரலாற்றைச் சோழவமிச சரித்திரம் 35, 36 - ஆம் பக்கங்களிற் காண்க. குளம் - தெலுங்கவீமனூர்; இவ்விக்கிரமனுக்குத் துணையாகச்சென்ற பராந்தக பாண்டியன் மெய்க்கீர்த்தியினும் 'தெலுங்கவீமன் குளங்கொண்டு தென்கலிங்கமடிப்படுத்து' என வருதல் காண்க. (895). ஐம்படைப்பருவம் - பாலப்பருவம்; மணிநா - ஆராய்ச்சிமணியின் நாக்கு.

813. அரும்பைத்தொள்ளாயிரம் என்ற நூலை இலக்கணவிளக்கப்பாட்டியலுடையார் எண்செய்யுளுக்குக் காட்டுவர் (88). அஃது கூத்தர் பாடிய நூல்போலும். 'சென்டாலடித்தது பொற்கிரி என்றது 'செண்டு கொண்டுகரி காலனொரு காலி லிமயச் சிமய மால்வரை திரித்தருளி'ய கதையையாம். "வேங்கைவைக்க வொருதிருக்கைச் செண்டாற் கிரிதிரித்த சேவகனை" (விக்கிரம உலா, 155) என்றார் இப்புலவரும்.

814. இவ்வெண்பாவின் முதலிரண்டடிகள், **விக்கிரமசோழனுலாவின்** 158-ஆம் கண்ணியாகும்.

815. 'இது சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதிப்பச் சிலேடித்தமையால் விரோதச்சிலேடையாயிற்று' என்பர்.

816. விகளம் - சங்கிலி.

817. மல்லை - மாமல்லபுரம். அஞ்சு அம்பு - காமனது பஞ்சபாணம்.

818. மண்ணுண்டையை ஊதியெறிந்து புள்வீழ்த்தும் சங்குத்தான் குழல்.

819. இவன் வரலாற்றினைச் **சோழவமிசசரித்திரம்** 36, 37 - ஆம் பக்கங்களிற் காண்க.

821. **பேராசிரியர்** நேமிநாதர் என்பார் தொல்காப்பியத்துக்கு உரையிட்ட பேராசிரியர்போலும். மனதுங்கன் - உயர்ந்த மனமுடையான். அபங்கன் - பங்கமற்றவன்.

822. உரவிதாய் அல்ல - வலிதானமையால் அன்று. புரவிதாவிய வகையால், பூமி அசையவில்லை என்பது கருத்து.

823. துலாபுருடதானமாவது, துலையில் ஒருவர்க்குச் சமமாகப் பொன் முத்து முதலியவற்றை இட்டு நிறுத்து, அந்நிறுத்தவற்றைத் தானஞ்செய்தல், 'உவாமதிபோய்விழுகின்றது' 'எழுகின்ற ஞாயிறு' என்பவற்றால், சந்திரவமிசத்தின் வீழ்ச்சியும் சூரியவமிசத்தின் எழுச்சியும் குறிக்கப்பட்டனவாம்.

823—4. துலாத்தட்டிலிருந்த சோழன் பொன்னிறையிற் குறைந்தபோது கூடுந்தாலும், அதனின்மிக்கபோது **புகழேந்தி**யாலும் இவை முறையே பாடப்பெற்றவை என்பது அறியற்பாலது.

826. பாண்டியன் 'அழியுநர் புறக்கொடை அயில்வே லோச்சான்' என்பது பற்றியதேயன்றித் தான்(சோழன்) புறங்கொடுத்தலில்லை என்பது பற்றியதன்று என்பது கருத்து.

829. தனவே என்று ஆளும் - தனக்கே சொம்மாக நினைத்துத் துய்க்கின்ற.

831. கொடுத்திடுவெனக் கொள்கின்றிலேம் - கொடுப்பாயாக நினைக்கின்றிலேம்.

832. வேந்தும் பொருளும் எங்குமில்லை என்க.

833. வீரன், இராசராசன் II, பெயர்; 'சென்னிநாட் டெரியல் வீரன்' என்றார் **கம்பநாடரும்**.. (கம்பரா. மருத். 58)

834. மூன்றாங்குலோத்துங்கன் வரலாற்றினைச் **சோழவமிசசரித்தி** 41, 42 - ஆம் பக்கங்களிற் காண்க.

836. அவிரோதச்சிலேடையணி. இரவி - ஆதித்தன், ஒரு சோழன். இரா, யாசகம். மாது இடத்தான் - சிவன்; மாநிடத்தால் - பெருவலி மன்மதன் - காமன், அரசர் செருக்கு. மதி - அறிவு, சந்திரன். குமுதம் - பலம், பூமிக்கு மகிழ்ச்சி. தனதன் - குபேரன், தனத்தைத அளிப்பவன்.

7. நேமிக்கூர் வெம்படை - சக்கராயுதம். இது புகழாப்புகழ்ச்சி.

9. மாலையுவமை.

1. நந்தந்தொழில்புரிந்தார் என்பது உள்ளங்களிக்கும்படி ஒழுகினோர், வெறுக்கும்படி ஒழுகினோர் என இருபொருள்பட்டு, அப்பொருள் கேற்ப, கெடாத வயலிடத்து வர்கள் தாமரையை அடையவும், அசைவிடத்தோர்மாரும் பேரிடங்களைத்தாவும் மரைவிலங்கும் அடையவும், இகழாத அரி (நெற்குட்டை)யை மானிடர் (உழவர்) திரட்டவும் படாத சிங்கப்போத்துக்கள் தன்புறத்தவும் எனவும் பொருள்கொள்க. ...ழிச்சிலேடை.

843. பணிந்த பகையரசர் தம் தலைமைவேந்தன்பெயரை மார்பினும் ...னும் எழுதிக்கொள்ளுதல் வழக்கு. 'மேவலர் மார்பினுந் திலகமோளி .....சேவெழுதும் பெருமான்' என்பர் (தமிழ் நா. 148). கயிறு - தலைக்

845. குணவேற்றுமையணி. மாயன் - கருநிறமுடையவன். சேயன் - ...நிறமுடையவன்.

846. ஏற்றல் - பகைவரை எதிர்த்தல், யாசித்தல்; ஏற்றல் ஒன்றுமாயி எறிதலும் இரத்தலும் வேறுபட்டன என்பதாம்.

847. நெடுமாலுக்கு—எறடர்த்தல் விடையூர்தலும், வின்முருக்கல் ...னை முரித்தலுமாகவும், சீர்நாட்டார்க்கு (சோழனுக்கு)—எறடர்த்தல் ...யனது கருவேற்றுக்கொடியைச் சிதைத்தலும், வில் முருக்கல் சேரன் ...யாகிய விலையைச் சிதைத்தலும் ஆகவும், நெடுமால் மாயன் (வஞ்சிப்பவன்), சீர்நாட்டார்மன் வஞ்சியான் (கருவூருடையான்) எனவும் கொள்க. எறு - பல்லவ ...து இடபக்கொடி எனினும் ஆம்.

848. 'வண்ண னவன்றன்' என்றும் பாடம். படி - வடிவம், போர்த் தொழிலில் உழந்து அடிகறுத்தமையின், 'ஆழ்கடல் வண்ணன்' என்றார்.

849. கரம் - கிரணம், கை. இரவு - இரா, யாசகம். பங்கயமாதர் - தாமரையாகிய பெண், இலக்குமி. ஓராழிவெய்யோன் - ஒற்றையாழித் தேரினன்; தனியாணையுடைய விரும்பப்படுவோன்.

851. எழிற்று ஆனை - எழிலையுடையதான யானை.

852. ஈற்றடியில் 'மின்னினும்' என்பதை 'மீனினும்' எனத் திருத்திக் கொள்க.

853. சுரை - சுரத்தல். கூடு - நெற்புரி. கூட்டில் மஞ்சு துயின்ற, கோழிலைப் பரக்கும் என்க. நாடு பெய்து பாய்ந்த என இடத்துநிகழ்பொருளின் தொழில்கள் இடத்தின்மேனின்றன.

854. வல்லமன் - சோழன்பெயர்போலும். வல்லவன் என்பது பாடமாயின் சளுக்கியவேந்தன் என்க.

857. பூழியன் - பாண்டியன்; 'பூழியனெனப்பெயரெய்தியும்' இராசசிங்கன்மெய்க்கீர்த்தி (892); சேரனுமாம்.

858. சாணக்கியன் - சந்திரகுப்தனது மந்திரி.

859. மாயன் - கருநிற முடையோன். ஒன்றே, வினா.

862. குமரி - குமரியாறு. குமரித்துறைவன் கங்கைத்துறை கீராடினன் என்பது கருத்து.

863. கோல் கொடுத்ததும் யாம் அதன் செலவைக் கண்டிலம்

8t5. ஏற்றரிமுரசம் - ஏற்றினது உரியைச் சீவாதுபோர்த்த வீரமுரசம் (புறநா. 228). மரபுளி - முறைமை. காழ் - இருப்புக்கோல். வறை - பொரிக்கறி. இறைச்சி. அருந்த ஏமாந்தனம் - உண்ணவிரும்பினேம்; 'அருந்தே மாந்த நெஞ்சம் - வருந்தவேண்டா வாழ்கவவன் றாளே' என்ற புறப்பாட்டு (101) இங்கு ஒப்பிடத்தக்கன.

866. இயற்சீர்ச்சுரிதகக் கொச்சகக் கலிப்பாவுக்கு மேற்கோள். யார் - வானோர். வக்கிரன் - ஓர் அசுரன்; 'வக்கிரனைக் கொன்றான்' என்பது மூன்றாந்திருவந்தாதி (21). சமழ்த்தல் - மயங்குதல். செம்பூட்சேய் - பாண்டியன் பெயர்; 'செம்பூட்சேயார் கூற்றியல்' என்ற இலக்கணநூற் பெயரான் அமைந்ததுபோலும். இவர் - திரிமூர்த்திகளும் இந்திர குமாரரும்; தமிழ்நாடைந்தின் (638) அரசருமாம்.

(1)	(2)	(1)	(2)